15வது வருடத்தில்

# விளம்பரம்™

VLAMBARAM™

☎ 416-282-8059 · 416-282-4978

நதி 15 | பாலம் 14 | சமூக முன்னேற்றப் பத்திரிகை | மாதமிருமுறை | இலவசம் | JULY 15, 2005

வாய், பல் சம்பந்தமான வைத்திய சேவைகளுக்கு

WALK IN DENTAL CLINIC

Dr. Iru Vijayanathan

குடும்ப பல்வைத்தியர்

OPEN 7 DAYS

416-264-3232

3150 Eglinton Ave. E.

Markham & Eglinton சந்திப்புக்கு அருகாமையில்

வீடு விற்க, வாங்க...

Raja M. Mahendran, P. Eng.

(Broker / Owner)



HomeLife GTA Realty Inc.

1711 McCowan Rd. Suite #206, Toronto

Direct: 416.315.9397

OFFICE: 416.321.6969


Sales Agents Welcome



மகிழ்ச்சியாக இருப்பது எப்படி? 04



பிரேசில் வெற்றி வாகை 06



நாடகப் பார்வையாளர் 08

## குண்டுகளுடன் தப்பிய பயங்கரவாதி எங்கே?

*இலண்டன் குண்டுவெடிப்பு தொடர்பாக மேலும் சில தகவல்கள் வெளியாகியுள்ளன. பாக்கிஸ்தான் வம்சாவளியைச் சேர்ந்த பிரிட்டிஸ் இளைஞர்கள் (30,23,19) உட்பட நான்கு பேரை வைத்து இந்த அனர்த்தத்தை செய்து முடித்துள்ளனராம். பின்னணியில் இருந்து செயற்பட்ட சூத்திரதாரிக்கு லண்டன் புலனாய்வுத் துறையினர் வலை விரித்துள்ளனர்.*

*குண்டுகளை வெடிப்பதற்காக இவர்கள் நான்கு பேரும் கிங்ஸ் கிராஸ் பாதாள இரயில் நிலையத்திற்கு வந்த போது முதுகில் பைகளைத் தொங்கவிட்டு, பேசிக்கொண்டே மெதுவாக நடந்து வந்ததை அங்கிருந்து கமரா பதிவு செய்துள்ளது.*

*வேவ்வேறு இரயில்களுக்கு குண்டு வைப்பதற்காக அங்கிருந்து இவர்கள் பிரிந்து சென்றுள்ளனர். குண்டுகளை வெடிக்கவைத்து மூன்று பேர் இறந்து போனாலும் நான்காவது நபர் என்ன ஆனார் என்று தெரியவில்லை. இவர் இந்த குண்டுகளுடன் உயிருடன் இருக்கின்றார் என்று புலனாய்வு அதிகாரிகள் நம்புகின்றனர். இவரால் பாதிப்பு ஏற்படலாம் என்றும் அவர்கள் எச்சரிக்கை செய்துள்ளனர்.*

*பாவிக்கப்பட்ட குண்டுகள் செய்த வீடு, குண்டோடு இருந்த ஒரு கார் என்பன கைப்பற்றப்பட்டுள்ளது. வீட்டில் இன்னும் ஏராளமான குண்டுகள் இருக்கக் காணப் பட்டது. கொலையாளிகள் இலண்டனில் இன்னும் பல குண்டுவெடிப்புச் சம்பவத்தை நடாத்த தயாராகவே இருந்துள்ளனர்*

# கிழக்கில் பதற்றம்

## புலிகளின் அலுவலகங்கள் மூடப்பட்டன

கிழக்கு மாகாணத்தில் அரசு கட்டுப் பாட்டு பிரதேசங்களில் உள்ள புலிகளின் அரசியல் செயலகங்கள் மற்றும் பொதுசனத் தொடர்பு நிலையங்கள் திடீரென மூடப்பட்டு விட்டன. இந்த அலுவலகங்களில் இருந்த விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் அந்த இடங்களிலும் இருந்தும் விலக்கப்பட்டுள்ளனர்.




திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில் இருந்த புலிகள் அந்த இடங்களை விட்டு வெளியேறி, புலிகளின் பாதுகாப்பான கட்டுப்பாட்டுப்பாட்டுப் பிரதேசங் களுக்குள் சென்றுவிட்டனர்.


புலிகளின் இந்த நடவடிக்கை இலங்கை அரசை மட்டுமல்ல நோர்வே மற்றும் யுத்த நிறுத்த கண் காணிப்புக் குழுவினரையும் பரபரப்பு அடைய வைத்துள்ளது.

இலங்கை அரசிற்கும் விடுதலைப் புலிகளிகளுக்கும் இடையில் கைச்சாத்திடப் பட்ட சமாதான ஒப்பந்தத்தின் பின்னர், புலிகளின் மீது நடத்தப்பட்டு வருகின்ற "கொரில்லா "தாக்குதல்களை தவிர்க்கும் முகமாகவே புலிகள் இந்த முடிவுக்கு வந்துள்ளனர் என்று தெரியவந்துள்ளது.

இதே சமயம் மூதூர் பாலத்தோப்பூர் இடத்தில் இலங்கை படையினர் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இதனால் பத்துக்கும் மேற்பட்ட இராணுவத்தினர் படுகாயம் அடைந்துள்ளனர். இந்த தாக்குதலை செய்தவர்கள் யார் என்று தெரியவில்லை.

இந்த பதட்டமான நிலைமை, மறுபடியும் ஒரு யுத்தத்துக்கு இட்டுச் செல்லாமல் இருக்க வேண்டும் என்று சர்வதேச சமூகம் கரிசனை கொண்டுள்ளது.

தொடர்ச்சி 02ம் பக்கம்



சந்திரமௌலீஸ்வர சிவாலயம்

ஆலயம் திறந்திருக்கும் நேரங்கள்

வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில் காலை 7am - மாலை 9pm வரை

திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm, மாலை 5pm - 9pm

தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்.

விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம். ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்

Tel: 416 - 754 - 7338 / 416 -724 -7480

3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarboro.

Singapore Communication

Since 1991

$40/350 min + Unlimited incoming local calling

$50/500 min + Unlimited incoming local calling

$75/750 min + Unlimited incoming local calling

**Option E & W calling , Free phone $20, $30 Packages also available

For More Info Please Visit to the Store

*** Offer Ends Without Notice***

More Info. Call: 416-740-5292

5010 Steeles Ave. W., Unit 17 ABC-(Kipling & Steeles)

துரித பணமாற்றுச் சேவை

வவுனியா - கொழும்புச் சுற்றுப் புறங்களுக்கும் - சிங்கப்பூர் - சென்னை ஆகிய இடங்களுக்கும் கடுகதியில் பணம் அனுப்புவதற்கு

மு. காசிப்பிள்ளை & சன்ஸ்

416.267.8221

"Making Dreams Reality"



HomeLife GTA Realty Inc.

Ravi R. Raveendran BSc.(Eng)


Sales Representative

416•817•8479

Bus: 416•321•6969

1711 McCowan Rd., Suite #206, Scarborough, ON. M1S 3Y3


INDEPENDENTLY OWNED AND OPERATED, BROKER



Insurance & Financial Services

Balan Kanapathi (Agent)

- Auto
- Home
- R.R.S.P
- Life
- Disability
- Mutual Fund
- Group Insurance
- Child Education
- Travel & Business



416.321.1515 • 905.294.2429

4433 Sheppard Ave. E. Suite 200, (Brimley/Sheppard)

வீடு வாங்க, விற்க...

ரவி பரமு

வீட்டுப் பிரதிநிதி



DIRECT: 416.262.4176

OFFICE: 416.321.6969

HomeLife GTA Realty Inc.

1711 McCowan Rd. Suite #206, Toronto

# உங்கள் வியாபார வெற்றிக்கு இணையத்தளம் தேவையா?

## பகுதி - 06

ஒரு நல்ல இணையத்தளம் எத்தகைய அம்சங்களைக் கொண்டிருக்கும்? முன்பு பார்த்தவற்றை நினைவு கூருவோம்.

1. படிப்பதற்கு எளிமையாக, இனிமையான வாசகங்களையும், படங்களையும், வெள்ளை யிடத்தையும் தக்க விகிதத்தில் கொண்டிருக்கும்.

2. வருகையாளர் தேடும் விபரத்தைச் சிரமம் இன்றி எளிதாகப் பார்க்கக்கூடிய முறையில் அமைக்கப்பட்டிருக்கும். இணையத்தளத்தில் ஒருபக்கத்தில் இருந்து மற்றொரு பக்கத்துக்கு மாறுவதும் எளிமையானதாக இருக்கும்.

3. செய்திகளை இணையதளத்தில் படிக்கும் போது பக்கங்களை மேலேயும், கீழேயும் நகர்த்திப் படிக்கக் கூடிய முறையில் அமைக்கப்பட்டிருக்கும். வலப்பக்கம், இடப்பக்கம் நகர்த்திப் படிக்க வேண்டும் என்றால் எரிச்சல்தான் வரும்.

4. எல்லோருமே DSL மூலம் இணையத் தளத்தைப் பார்ப்பதில்லை. தொலைபேசி வழியாக இணையத்தளத்தை உபயோகிப் பவர்களும் எளிதில் பார்க்கக்கூடிய வகையில், படங்களோ, சப்தமோ அதிகம் சேர்க்கப் பட்டிருக்கமாட்டாது.

5. இணையத்தளப் பக்கங்களில் கொடுக்கப் பட்டுள்ள இணைப்புக்கள் (Links) வேலை செய்யும். அதாவது இணைப்புக்கள் வேலை செய்கின்றனவா என்று இணையத்தள கண் காணிப்பாளர் அவ்வப்போது கண்காணித்துக் கொள்வார்.

6. செய்திகள் சுடச் சுட புதிதாக, சுவையாக தினந்தினம் அல்லது அடிக்கடி மாற்றப் பட்டிருக்கும்.

7. வருகையாளருக்கு ஏற்ற வகையில் வடிவமைப்பு இருக்கும். ஆண்களுக்கான பிளேட் தயாரிக்கும் நிறுவனத்தின் வடிவமைப்பு நிச்சயம் ஆண்களுக்கு ஏற்புடையதாக ஆண தன்மை கொண்டதாக இருக்கும்.

8. தொடர்பு கொள்க பக்கம் நிச்சயம் இருக்கும். சில படிவங்களையும் அங்கு சேர்ந்திருக்கக் கூடும்.

**செய்யும் தொழிலில் வெற்றி பெற**

9.இணையத்தளப் பக்கங்களைப் பார்க்கப் பயன்படும் சாதனம் பிறொசர்(browser) என்றழைக்கப்படும். பெரும்பாலான கணினிகளில் இருப்பது 'எக்ஸ்புளோரர்' என்றழைக்கப்படும் பிறொசரே ஆகும். பிறொசர் என்றால் பார்க்கும் சாதனம் என்று தமிழ்ப்படுத்தலாம். எக்ஸ் புளோரர் தவிர நடைமுறையில் பெருவாரியாக உபயோகிக்கப்படும் மற்ற பிறொசர்கள், நெட்ஸ்கேப், கேவிகேட்டர், ஏஓஎல் போன்றவை யாகும். இணையத்தளப் பக்கங்கள் இந்த வேறு பட்ட பிரௌசர்களில் சரியான முறையில் தெரிகின்றதா என்று சோதிக்கப்பட்டிருக்கும்.

10. ஒழுங்குபடுத்தப்பட்ட பயன் உள்ள கட்டுரைகள், செய்தித் தொகுப்புக்கள் வரு கையாளரை மீண்டும் மீண்டும் வர வழைக்கும். வியாபாரத்துக்குப் பயன்தரும் வகையில் இணையத்தளங்களை எவ்வாறு சிறப்பாகப் பயன்படுத்துகின்றனர்?

### பெரி. முத்துராமன்

1. மின் செய்திக்கடிதம், வாடிக்கையாளருடன் நிரந்தரத் தொடர்பு கொண்டிருக்க இது ஒரு வழி.

2. செலவில்லாத அதிகஅளவிலான மின் அஞ்சல்கள். மின்அஞ்சல் முகவரிகள் உங்கள் வசம் இருக்க வேண்டும்.

3. இணையத்தளம் விற்பனை. இதுவும் சாத்தியமே. கிரெடிக்கார்ட்டுகள் மூலமாக, வாடிக்கையாளரை நேருக்கு நேர் சந்திக்கா மலேயே, உங்கள் பொருள் அல்லது சேவையை விற்பனை செய்யக்கூடும்.

4. பொதுமேடை: நாலுபேர் தங்கள் கருத்துக்களைக் கூறவும், விவாதிக்கவும் அமைத்துக் கொடுக்கப்பட்டிருக்கும், பொது மேடை.

இன்றைக்கு வியாபாரத்தைப் பெருக்க இணையத்தளங்களின் மூலமாக புதிய புதிய யுக்திகள் நாளும் கையாளப்படுகின்றன. முதலில் எளிமையான யுக்திகளை கையாண்டு வெற்றி வரவர மேலும் சிக்கலான, கடினமான யுக்திகளைக் கையாளத் துவங்கலாம்.



இணையத்தளம் பற்றி எழுதி வந்த கட்டுரைத் தொடர் இத்துடன் நிறைவு பெறுகின்றது.

# கிழக்கில் பதற்றம்........

01ஆம் பக்கத் தொடர்ச்சி

கடைசியாகக் கிடைத்த தகவலின் படி திருகோணமலை தம்பலகாமத்தில் ரஞ்சித் லொக்குகெட்டி என்ற இராணுவ அதிகாரி இனம் தெரியாத நபர்களால் சுட்டுக் கொல்லப் பட்டுள்ளார். இவர் காலை உடற்பயிற்சி முடித்து வேலைக்குச் சென்று கொண்டிருக்கின்ற நேரமே துப்பாக்கியால் சுடப்பட்டார்.

இதே சமயம் புலிகளின் பிஸ்டல் குழுவொன்று வவுனியாவுக்குள் ஊடுருவி உள்ளது என்றும் செய்திகள் வெளியாகியயுள்ளன. அததை அடுத்து வவுனியாயில் இலங்கைப்படையினர் தமது பாதுகாப்பை பலப்படுத்தியுள்ளனர். வவுனி யாவில் இருந்து செயலாற்றிவந்த மாற்றுக் குழுக்களைச் சேர்ந்தவர்கள் தமது உயிருக்கு ஆபத்து ஏற்படும் என்று கருதி அங்கிருந்து கொழும்புக்குத் தப்பி ஓடியுள்ளனர்.

இவற்றிற்றுக்கெல்லாம் உச்சக் கட்டமாக தமிழீழ விடுதலைப் புலிகள் மீது தாக்குதல் நடத்த இலங்கை இராணுவத்திற்கு அனுமதி வழங்கப் பட்டுள்ளது. இராணுவத் தளபதி சாந்த கொட்டகொட இந்த உத்தரவைப்பிறப்பித் துள்ளார்.

இலங்கை இராணுவத்தினர் மீது இனம் தெரியாதவர்களால் நடாத்தப்படும் தாக்குதல் களைத் தொடர்ந்து, புலிகள் தாக்கினால் உடன் எதிர்த்துத் தாக்குமாறு உத்தரவு பிறக்கிப் பட்டுள்ளது.

இலங்கையில் நிலவும் இந்த பதட்ட நிலைமை தணிக்கப்படாத பட்சத்தில், மறுபடியும் போர்ச் சூழலுக்கு செல்லக்கூடிய நிலைமையையே உருவாக் கும் என்று சமாதானத்தை விரும்பு கின்றனவர்கள் அச்சப்படுகின்றார்கள்.

# தமிழ் ஒலிபரப்பின் தரம் இறங்கலாமா?

## பரம். ஜிக்கு வந்திருக்கும் கோபம்.

கடந்த முதலாம் திகதி வெளியான 'விளம்பரம்' பத்திரிகை படித்தேன். "சாதாரண மனிதனின் பார்வையிலிருந்து" பயணக்கட்டுரையின் ஒரு பகுதியை சர்வ சாதாரணமாக எடுத்துக்கொள்ள முடியவில்லை. பரம். ஜி சில யதார்த்தங்களை அதில் வெளிப்படுத்தியிருக்கிறார்.

எவ்வாறு?
இதோ மீண்டும் ஒரு தடவை படித்துப் பார்ப்போம்.

"தாய்மண்ணில் அனுபவிக்க விரும்புவதில் இலங்கை வானொலி நிகழ்ச்சிகளும் ஆகும். எமது இளமைக்காலத்தில் சிந்தனைக்கு இனிமையான தீனி போட்டதில் அதன் பங்கு ஒப்பிடமுடியாதது. அந்தக்கால நினைவுகளுடன் வானொலிப் பெட்டியைத் திருப்பினால் ஏதோ ரொறொன்ரோவில் ஒலிபரப்பாகும் வானொலி நிகழ்ச்சியை கேட்பது போன்றதொரு உணர்வு. அலைவரிசையில் (FM) உள்ள மிகத் தெளிவான கேட்கும் தன்மையை தவிர முன்னைய வானொலி நிகழ்ச்சிகளுக்கு கண்ணூறு பட்டு விட்டதோ என்று எண்ணத்தூண்டும் வகையில் நிகழ்ச்சிகள். வானொலியில் அறிவிப்பாளர்கள் தம்மை ஏதோ அதிமேதாவிகள் என்று எண்ணிக் கொண்டது போலும் அறிவிப்பு என்ற பெயரில் அபத்தமான உளறல்கள். கொச்சை தமிழ் தாண்டவம் ஆட, இசை, பாடல்கள், கலைத்துறை, பொது அறிவு என்பன போன்றவற்றில் ஞானசூனியங்களாக இருப்பவர்கள்தான் அறிவிப்பாளர்களாக இருப் பார்கள் போல எண்ணத்தூண்டும் வகையில் நிகழ்ச்சிகள். தமிழ் வானொலி நிகழ்ச்சிகளுக்கு பிறந்த மண் முதலாக உலகில் தமிழர் வாழும் எல்லாப்பகுதிகளிலும் ஏதோ சாபக்கேடு போலும். தடி எடுத்தவர்கள் எல்லாம் தண்டல் காரர்கள ஆன கதைபோல ஆன கதைதான் என்று எண்ணிக்கொண்டு அடித்து மூடிய வானொலியை திரும்பும்வரை திறக்கவே யில்லை."

### வி. என். மதிஅழகன்

உலகெங்கணும் உள்ள தமிழ் ஒலிபரப்பாளர் களின் வழிகாட்டியாக விளங்குவது இலங்கை வானொலி. அதன் தரம் குன்றிவிட்டதாக பரம். ஜி போன்ற நேயர்கள் ஆதங்கப்படுவது சம்பந்தப்பட்டவர்களை கவலையில் ஆழ்த்தவே செய்யும். ஒலிபரப்பினூடாக தாம் சார்ந்த நிலையத்தின் மகத்துவத்தை பேணிக்காப்பவர் கள் அறிவிப்பாளர்களே! அவர்கள் தராதரம் மிக்கவர்களாக விளங்கினால் ஒலிபரப்பின் தரம் மேன்மையுறும்.

பாடசாலைகளில் எவரும் தமிழ்போதிக்கலாம் என்றொரு துர்ப்பாக்கிய நிலை எப்போது தோன்றியதோ அன்று தொடங்கியது அழிவுக் காலம் ஒலிபரப்புத் துறைக்கும், பண்டிதர்கள், புலவர்கள், வித்துவான்கள் உருவாகுவது படிப்படியாக அருகிவந்ததன் எதிரொலியாக இன்றைய பிரச்சினையை எதிர்நோக்குகிறோம். முறையாகத் தமிழை கற்காதவர்களால் எவ்வாறு அதனை எல்லோராலும் ஏற்றுக்கொள்ளத்தக்க முறையை போதிக்க இயலும்?

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச் சேவையில் இயல் நாடகக் கட்டுபாட்டாளராக விளங்கியபோது இளம் ஒலிபரப்பாளர்களின் மொழியாழுமை இதனை எனக்கு உணர்த்தியது. போராதனை பல்கலைக் கழக தமிழ்ப் பேராசான் எஸ். தில்லைநாதன் அவர்களுடன் வேதனையை பகிர்ந்து கொண்டேன். அவர் சொன்னார். "மதி நீ என்ன சொல்லுகிறாய்? பல்கலைக் கழகங்களுக்கு வந்து சேர்பவர்களுக்கே பாடநெறிகளை தொடங்குவதற்கு முன்னர் ஆறு மாதங்களுக்கா வது மொழிப் போதனை செய்ய வேண்டியிருக்கு. பாடசாலை மட்டத்தில் தொடங்குகிற பிரச்சினைக்கு உன்னால், என்னால் என்ன செய்ய முடியும்?

பேராசனின் ஆலோசனை ஒன்றைத் தொடர்ந்து கொழும்பு தமிழ்ச் சங்கத்தை தொடர்பு கொண்டேன். தமிழைத் தமிழாகவே போதிப் பதற்கு ஏற்றவர்களை உருவாக்க உருப்படியாக ஏதாவது செய்தாக வேண்டுமே என அப்போதைய தலைவரை வேண்டினேன். தமிழகத்துக்கு தமது செலவில் அனுப்ப பண்டிதர்களை, புலவர்களை, வித்துவான்களை உருவாக்க தமிழ்ச்சங்கம் விண்ணப்பிக்கக் கோரியது.

எவராவது முன்வந்தார்களா? ஒருவராவது விண்ணப்பிக்கவில்லை. எனக்கு ஞாபகம் வருகிறது. தமிழ்ச்சங்கத்தில் கல்விமான்கள் பலர் கலந்து கொண்ட கூட்டமொன்றில் உரையாற்றக் கிடைத்த சந்தர்ப்பம். "பண்டிதர் கள், புலவர்கள், வித்துவான்கள் என்போர் T. 56 முனையிலாவது உருவாக்கப்படவேண்டும்" - உணர்ச்சிகரமாகப் பேசினேன். உரை என் னவோ நன்றாக இருந்தது என்றே எல்லோரும் சொன்னார்கள். பயன்தான் ஏதுமில்லை.

தென்னிலங்கை, பேருவளையிலிருந்து ஒலி பரப்பில் இணைந்து கொண்டவர் பெரோஸ் என்பவர். இவர் பின்னர் செய்திவாசிப்புத் திறனுக்காக ஜனாதிபதி விருது பெற்றவர். அவரைக் கேட்டால் சொல்லுவார் "நான் தமிழ் படிச்சது யாழ்பாணத்து வாத்திமாற்றை."

கல்முனையில் இருந்து வந்து புகழ்பெற்ற ஒலிபரப்பாளராக மாறியவர் ஏ. ஆர். எம் ஜிப்றி. அவர் சொல்லுவார் "யாழ்ப்பாணத்து சேர்மாரிற்றை படிச்சதாலை இண்டைக்கு இப்படி இருக்கிறம்"

தொடர்ச்சி 03ம் பக்கம்

விளம்பரம்
VLAMBARAM

விளம்பரம் பத்திரிகை விளம்பரம் பப்க்கேஷன்ஸ் ஆல் வெளியிடப்படுகிறது. விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களே பொறுப்பாளர்கள்.

**பதிப்புரிமை:** 2004 விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ். விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்கங்களை முழுமையாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

Vlambaram, P.O. Box 37527, 31 Tapscott Road, Toronto, ON M1B 5P9, Canada
TEL: 416-282-8059 FAX: 416-282-4978
e-mail: vlambaram@sympatico.ca Web: www.vlambaram.com

HOME INSPECTION
• வீடு தரமானது என உறுதிப்படுத்திக் கொள்ள... • வீடு பராமரிப்பு பற்றி விளக்கமாகத் தெரிந்து கொள்ள...
ந. தயாபரன்
Certified Inspection Specialist
Expert Building Inspections LTD.
• Exceed the Standards • Industry Canada Registered • Professionals Serving the GTA • On site Report
24 /7 - Toll Free - 1.866.373.3315 416.727.8336

# இளமையில் இருந்து முதிர்ச்சி அடைவதைத் தடுக்கின்ற உயிர்ச்சத்து எது?

நீண்டகாலம் உயிர்வாழ்வதற்கான இரகசியங்கள்-10

### உங்களை இளமையாக வைத்திருக்க உதவும் செலினியம்

செலினியம் உடலில் இல்லாவிட்டால் உடற்கலங்கள் வைரசால் பாதிக்கப்படும் தன்மை அதிகமாகும். உடலின் நோய் தடுப்புத் தொழிற்பாடு சரிவர நடைபெறாது விட்டுவிடும். அத்தோடு, இதயநோய்கள், புற்று நோய்கள் வருவதற்கான சாத்தியங்களும் உண்டு. உடலுக்கு மிக முக்கியமாகத் தேவைப்படும் கனியுப்புகளில் ஒன்று செலினியம் ஆகும். மிகச் சிறிய அளவு செலினியம் எமது உடலுக்குப் போதுமானது.

ஐக்கிய அமெரிக்க விவசாயத் துறை ஆய்வாளர்களின் கண்டுபிடிப்பின் படி செலினியம் வைரசைக் கட்டுப்படுத்துவது அறியப்பட்டுள்ளது. ஏயிட்ஸ் நோயாளர்களை பரிசோதனை செய்த போது அவர்களில் குறைந்த அளவு செலினியம் இருந்ததும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

குருதிக் குழாயில் உள்ள LDL கொலோஸ்ரோல் (கூடாத கொலோஸ்ரோல்) சுயாதீன மூல கங்களால் (Free radicals) ஒட்சியேற்றம் அடைந்து, மெல்ல மெல்லமாக குருதிக் குழாய்களில் படிய ஆரம்பிக்கும். பின்னர் ஒரு கட்டத்தில் இது குருதிக் குழாய்களை அடைத்துவிடும்.

இப்படி ஒரு நிலைமை ஏற்படுமாயின் அது இதயத் துடிப்பை நிறுத்துகின்ற நிலைமையை ஏற்படுத்திவிடும். கனியுப்புகளில் ஒன்றான செலினியம் LDL கொலோஸ்ரோல் ஒட்சியேற்றம் அடைவதை தடைப்படுத்துகின்றது. இதன் காரணமாக இதய நோய், மாரடைப்பு என்பன வருவது தள்ளிப்போடப்படுகின்றது.

செலினியம், புரதத்துடன் சேர்ந்து Seleno proteins என்ற பொருள் உருவாகின்றது. இது ஒரு antioxidant enzymes ஆகும். சுயாதீன மூலகங்களால் (Free radical) உடல் கலங்களின் கலச்சுவர் பாதிப்படைவதை இது தடுக்கின்றது. அது மட்டுமல்ல Seleno proteins enzymes, தைரொயிட் தொழிற்பாட்டுக்கும், நோய் எதிர்ப்பு தொழிற்பாட்டிலும் (Immune system) பிரதான பங்கு வகிக்கின்றது.



கனியுப்புகளை தாவரங்களோ, விலங்குகளோ தாமாக உருவாக்குவதில்லை. ஏற்கனவே மண்ணில் உள்ள கனியுப்புக்களை தாவரங்கள் உறிஞ்சுகின்றன. மண்ணில் செலினியம் இல்லை என்றால் அந்த மண்ணில் வளரும் தாவரங்களில் செலினியம் இருக்கமாட்டாது. செலினியம் செறிவான மண்ணில் விளையும் தாவரங்களிலும், அத்தகைய மண்ணில் வளர்க்கப்படும் விலங்குகளிலும் மட்டுமே செலினியம் போதுமான அளவில் காணப்படும்.

இயற்கையின் நியதியாக, உலகத்தின் சில பகுதிகளில் செலினியம் குறைவாக உள்ளது. உதாரணமாக சீனாவின் சில பகுதிகளில் அளவுக்கு அதிகமான செலினியம் உள்ளது. அதே சமயம் சீனாவின் வேறு சில பகுதிகளில் உலகத்தில் மிக குறைவான செலினியம் உள்ள நிலைமையும் உள்ளது. மற்றும் ருஸ்யாவின் சில பகுதிகளிலும் செலினியம் மிகக் குறைவாக உள்ளது. அதே சமயம் உலகின் சில பகுதிகளில் செலினியம் மிக அதிகமாக உள்ளது.

சீன யாத்திரிகனான மார்க்கோ போலே (Marco polo) பதின் மூன்றாம் நூற்றாண்டில் மேற்கு சீனாவுக்கு பயணம் செய்யும் போது, சிலவகை தாவரங்களை அளவுக்கு அதிகமாக உண்ணும் குதிரைகளில் ஏற்படும் சிக்கல்களை அவதானித்தார். பின்னர் கண்டுபிடிக்கப்பட்டது இந்தப் பிரதேசங்களில் செலினியம் அதிகமாக உள்ளது என்று அதே சமயம் சீனாவின் வேறு சில பகுதிகளில் உலகத்திலேயே மிகக்குறைவான செலினியம் உள்ளது. இதனால் இப்பகுதிகளில் Keshan என்ற நோய் உள்ளது. இந்நோய் உள்ளவர்கள் இப்போது செலினியம் வழங்கு வதன் மூலம் குணப்படுத்தப்படுகின்றார்கள்.

**செழியன்**

இதே போல Kashin- Beck நோயும் (big joint disease) செலினியம் குறைவான சீனாவின் பகுதிகளிலும், தீபேத், சைபீரியா, வடகொரியா போன்ற நாடுகளில் அவதானிக்கப்பட்டுள்ளது.

உணவுப் பொருட்களைப் பொறுத்தவரை Brazil nuts dried, Tuna , Beef, கோழியின் மார்பு இறைச்சி, முட்டை என்பனவற்றில் ஓரளவு செலினியம் உள்ளது. அளவுக்கு அதிகமான செலினியம் உடலில் பாதிப்புக்களை உருவாக்கும். குருதியில் 100mg/dl அளவுக்கும் அதிகமாக செலினியம் இருக்குமாயின் அந்நிலை Selenosis என்று அழைக்கப்படுகின்றது.

வயது போகப் போக உடலில் உள்ள செலினியத்தின் அளவு குறைகின்றது. அறுபது வயதுக்குப் பிறகு ஆறு வீதமாகவும், எழுபத்தி ஐந்து வயதுக்குப் பிறகு இருபத்திநான்கு வீதமாகவும் செலினியம் குறைகின்றது. பிரசல்ஸ் பல்கலைக்கழகத்தில் செய்யப்பட்ட ஆராட்சியின்படி முதியவர்களுக்கு 100 மைக்ரோ கிராம் செலினியம் ஆறுமாத காலம் வழங்கப்பட்டதின் பின்னர், செயற்பாடு குறைந்து காணப்பட்டு நோய் எதிர்க்கும் சக்தி மிகச் சக்தி வாய்ந்த எதிர்ப்புத் தன்மையாக மாறியது கண்டு பிடிக்கப்பட்டது.

இதன் அறிகுறிகளாக வயிற்றில் குழப்பம், மயிர் உதிர்தல், நகங்களில் வெள்ளைப்புள்ளி தோன்றல், சுவாசத்தில் உள்ளி மணம் வருதல் என்பனவற்றுடன் நரம்புகளிலும் பாதிப்பு ஏற்படும். செலினியம் குறைபாடு ஏற்படுமாயின், நமது நோய் எதிர்ப்புச் சக்தியும் குறைகின்றது. நோய் எதிர்ப்பு சக்தியான IgG, IgM என்பன குறைவதால் இந்நிலை ஏற்படுகின்றது.
நமது உடலுக்குத் தேவையான அளவு செலினியத்தை விட குறைவான அளவில் உள்ளெடுப்பது, சுவாசப் புற்று நோய், தோல் புற்று நோய், விதைப் புற்றுநோய் என்பனவற்றை அதிகரிக்கின்றது என்றும் சில ஆராட்சிகள் கூறுகின்றன.

# தமிழ் ஒலிபரப்பின் தரம்......

02ஆம் பக்கத் தொடர்ச்சி

இப்போது யாழ்ப்பாணத்தில் இருந்துவந்த ஒலிபரப்பாளர்கள் கூட ளகர, ழகர, லகர வேறுபாடுகள் தெரியாமால் பேசி நேயர்களை திக்குமுக்காட வைத்து விடுகிறார்கள். யாழ்ப் பாணத்தவர்கள் சுத்தமாகத் தமிழ் பேசுபவர்கள் என்ற பெருமை இனி புராதனச் சிறப்பாகவே பேசப்படும் என்ற அச்சம் ஏற்கனவே எழுந்து விட்டது.

குரல்வளம் மிக்க ஒருவர் மொழியாழுமை மிக்கவராக இருந்தால் ஒலிபரப்புத்திறன் பெற பல்கலைக்கழகம் செல்லத் தேவையில்லை. மூத்த ஒலிபரப்பாளர் களின் வழிகாட்டலில் தகுந்த பயிற்சிகள் பெறுவதன்மூலம் உலகப் புகழ் பெற்ற அறிவிப்பாளர்களாக வரமுடியும். குரல் வளம் இயற்கையாக அமைவது. மொழியாழுமை என்பது உச்சரிப்பு, கையாளும் ஆற்றல், வழங்கும் திறன் என்பவற்றில் தங்கியுள்ளது. நான் பேசுவது குறித்து மற்றவர்கள் என்ன நினைக்கிறார்கள் என்பதை உய்த்துணராதவர்கள் நல்லதொரு அறிவிப்பாளராக வர முடியாது. எங்கும், எதிலும், எப்போதும் சுய தரிசனம் அவசியம்.

என் அன்பிற்கினிய ஒலிபரப்பாளர்களே! பரம். ஜியின் எழுத்தால் நீங்கள் மனம் புண்பட வேண்டாம். உங்களுக்கு இயல்பாக உள்ள ஆர்வத்தினால் சேவைகளை இந்த அளவுக்கு முன்னெடுத்து வருகிறீர்களே. அதற்காக உங்களை நாம் வெகுவாகப் பாராட்டுகிறோம். உங்கள் மத்தியிலிருந்து S.P மயில்வாகனன், ராஜகுரு சேனாதிபதி கனகரத்தினம், இராஜேஸ்வரி சண்முகம், புவனலோஜினி, நடராஜசிவம், சரு இம்மானுவேல், கே. எஸ். ராஜா என வளர்த்த ஒலிபரப்பில் தனிமுத்திரை பதித்தவர்கள் போல் பலர் உருவாகவேண்டும் என்பதே பரம். ஜியின் ஆதங்கம் என்பது அவரது எழுத்தில் இருந்து பூடகமாகப் புலப்படுகிறது. அறிவிப்பாளர்கள் மொழியாழுமை மிக்கவர்களாக, அறிவில் உயர்ந்தவர்களாக, பண்பாடு தெரிந்தவர்களாக, இசைஞானம் உள்ளவர்களாக திகழ வேண்டுமென பரம். ஜி போன்றவர்கள் எண்ணிப்பார்ப்பதில் தவறில்லையே.

என்ன செய்யலாம்? விருப்பத்தினாலோ, விபத்தினாலோ வேறு எந்தக் காரணத்தினாலோ ஒலிபரப்புத் துறை என்ற நீச்சற் குளத்துள் குதித்து விட்டால் நன்றாக நீச்சலடிக்க பழகிக் கொள்ளுங்கள். கையைக் காலை மட்டும் அடித்து பிழைக்கமுயன்றால் நேயர்கள் தான் பாவம். கவலையில் மூழ்கிப் போவார்கள். வானொலியை அடித்து மூடாமல் பரம். ஜி போன்றவர்களை இருபத்தினான்கு மணி நேரமும் திறந்து வைக்குமாற்போல் உற்சாகம் பெற வைப்பது உங்கள் ஆற்றலிலேயே தங்கியுள்ளது. ஆற்றலை வளர்த்துக் கொள்ள வழிகளா இல்லை. அது அவ்வாறிருக்க புலவர்கள், பண்டிதர்கள், வித்துவான்கள் உருவாக்கி தமிழ் மொழிக்கு வாழ்வளிக்க உணர்வு மிக்க கனேடிய தமிழ் அன்பர்கள் ஒருக்கால் எண்ணினால் என்ன? எம்ம வர்க்கு முயன்றால் முடியாதது என்று ஏதும் உண்டா? அது சரி. பரம். ஜி! உங்கள் பயணக்கட்டுரைக்கு "போவோமா ஊர்கோலம்" என்று தலைப் பிட்டிருக்கிறீர்களே! அதன் அர்த்தம் என்னவோ.?

பரம் ஜியின் பயணக் கட்டுரையை படித்ததால் எழுந்த மனக்கோலத்தை வெளிப் படுத்தியிருப்பவர், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் பிரதிப்பணிப்பாளர் நாயகமாய் விளங்கிய வி. என். மதிஅழகன் அவர்கள். இவர் ஒலிபரப்புத்துறையின் அதிஉயர் சர்வதேச கௌரவமாக கருதப்படும் "UNDA" விருது பெற்றவர். இலத்திரனியல் ஊடகம் மூலமாக ஆற்றிய தமிழ்ப் பணிகளுக்காக "தமிழ்மணி" சாஹித்திய விருது வழங்கப்பட்டவர். ஒலிபரப்புத் துறையில் அறிவிப்பாளராக, நிகழ்ச்சித் தயாரிப்பாளராக, நிகழ்ச்சி அமைப்பாளராக, இயல், நாடகம் கட்டுப் பாட்டாளராக, தமிழ்ச்சேவைப் பணிப்பாளராக பயிற்சியாளராக பல்வேறு பதவிகளை வகித்தவர் வி. என். மதிஅழகன்.

# சிறுநீரக நோய்க்கு சோயா மருத்துவம்

அமெரிக்க ரெக்சாஸ் பல்கலைக்கழகத்தின் உடல்நல அறிவியல் மையம் ஆய்வு ஒன்று, அசைவ உணவு வகைகளுக்கு மாற்றாக , புரோட்டீன் வேண்டி சோயா பொருட்களை உண்பவர்களுக்கு சிறுநீரில் வெளியேறும் கல்சியம் உப்பின் அளவு 50% குறைகின்ற தாகவும், சிறுநீரக நோய் அபாயத்தை குறைக்கும் ஆற்றல் உடையதாகவும் கண்டறியப்பட்டுள்ளது.

சர்க்கரை நோயைக் கட்டுப்படுத்தும் மருத்துவக் குணமும் சோயாவுக்கு உள்ளது. தினமும் நாம் உண்ணும் உணவில் சோயா சேர்த்துக் கொள் வதால், பெண்களுக்கு மாதவிடாய் காலங்களில் 'ஈஸ்ட்ரோசன்' உற்பத்தி குறைவால் உண்டாகும் நோய்கள் கட்டுப்படுத்தப்படுகின்றது. அதே நேரத்தில் எலும்புகளுக்கு வலுவூட்டவும் செய் கின்றது. நாள் முழுவதும் தெம்பும், புத்துணர்ச்சி யும் தர வல்லது சோயா உணவு.


APPLEMORE AUTOMOTIVE

உட்புற, வெளிப்பு திருத்த பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்

Accredited Test & Repair Facility

- Detailing
- Motor Shampoo
- Interior Shampoo
- Exterior Wash
- Waxing

- Repairs
- Safety Certification
- Overall Maintenance
- Under Coating
- Rust Proofing

416-285-4998

435 Midwest Road. Unit B5, Scarborough, ON. M1P 3A6

SPECIAL



# வாழ்க்கையில் என்றும் மகிழ்ச்சியாக இருப்பது எப்படி?

ஒருவரைப் பார்த்து வாழ்க்கையில் உமது இலக்கு/இலட்சியம் என்ன என்று கேட்டால், பொதுவாக அவர் தனது ஆசைகளையே வரிசைப்படுத்துவார். உதாரணமாக, நல்ல வீடு, நல்ல கார், நல்ல மனைவி / கணவன், நல்ல வேலை இவ்வாறே பட்டியல் நீண்டு கொண்டே போகும். தான் மகிழ்ச்சியாக இருக்கும் நோக்கிலே அவர் இவற்றையெல்லாம் எதிர்பார்க்கின்றார். இதனால் ஏற்படும் சந்தோசம் எல்லைக்குட்பட்டது (Limitted). இந்த இன்பம் நிலையற்றது. இந்த மகிழ்ச்சி 'ஐஸ்பழம்' போன்றது. ஒரு சிறிய நேரத்திற்கு மட்டுமே இனிமையை கொடுக்கும். போகப் போக வெறும் ஐஸ் மட்டுமே மிஞ்சும். அதாவது எந்த இனிமையும் இருக்காது. மற்றும் விரைவில் கரைந்து போகக்கூடியது; நிலையற்றது. எந்த சூழ்நிலைக்கும் ஏற்றதன்று.

மகிழ்ச்சி என்பது அருமருந்தாக, சிறந்த போசாக்கு நிறைந்த உணவாக செயற்படுகிறது. ஆங்கிலத்தில் கூறுவார்கள் "There is nothing nourishment as happines". இதற்கு பல ஆதாரங்கள் உள்ளன. ஒருவரின் உடலில் எவ்வளவு வியாதிகள் இருப்பினும் அவன் மனம் அமைதியாக ஆனந்தத்தில் இருந்தால் எந்த நோயும் அவரை தாக்காது. வாய்விட்டுச் சிரித்தால் நோய் விட்டுப் போகும் என்று கூறுவதும் இதனால் தான். சந்தோசமாக இருப்பவர்கள் அமிர்தம் பருகியவர்கள். அவர்களின் ஆயுள் அதிகமானது என படித்து இருக்கின்றோம். அந்த அமிர்தம் எதைக் குறிக்கின்றது. அது 100% மகிழ்ச்சியைக் குறிக்கிறது. சொர்க்கத்தில் இருப்பவர்கள் சதா சந்தோசத்தில் இருப்பவர்கள். அதனாலேயே அவர்கள் ஆயுள் அதிகமாக உள்ளது.

இத்தகைய இனிமை நிறைந்த இன்பத்தை நாம் சதா அனுபவிப்பதற்கு தடையாக இருக்கும் காரணங்கள் என்ன? இதற்குக் காரணம் எமது எண்ணம், சொல், செயல் எதிர்மறையானதாகவும் (Negative) குறைபாடு உடைய தாகவும் இருத்தலே ஆகும். உதாரணமாக, உங்களை நோக்கி ஒருவர் வரும் போது 'இவர் கெட்டவரா', 'கோபக்காரரா' என்ற எண்ணம் உங்களுக்கு ஏற்படுமானால் அந்த எண்ணம் உடனடியாக அதிர்வின் மூலம் அவரைச் சென்றடையும். நீங்கள் அவரைப் பற்றி தவறான எண்ணம் கொண்டதால், அதை அவர் முழுமையாக அறியாவிடினும், அவருக்கு உங்கள் மேல் ஓர் இனம் தெரியாத வெறுப்பு ஏற்படும். அதேபோல் நல்ல எண்ணம் கொண்டீர்களாயின் ஓர் இனம் புரியாத அன்பு ஏற்படும். (vice versa). அகத்தின் அழகு முகத்தில் தெரியும் என்பார்கள். இந்த வெறுப்பு அதிகரிக்குமானால் பல பிரச்சினைகளும், குழப்பங்களும் வெளியே தோன்ற ஆரம்பிக்கும். இந்த இடத்தில் நிச்சயமான மகிழ்ச்சி நில்லாது. அதேபோல் நாம் சொல்லும் சொல்லிற்கேற்ப சூழ்நிலை மாறிவிடும். உதாரணமாக மகிழ்ச்சியாக இருப்பவர்கள் நடுவில் ஒருவர் கோபத்துடன் சத்தமிடுவாராகில் அந்த மகிழ்ச்சியான சூழ்நிலை ஒரு வினாடியில் மாறிவிடும்.

அடுத்து செயல். ஒருவரின் கன்னத்தில் நீங்கள் கோபம் கொண்டு பலமாக அறைந்தால் அவர் மகிழ்ச்சியுடன் மற்றக் கன்னத்தையும் காட்டுவாரா? அல்லது இத்தகைய செயலைச் செய்து விட்டு நாம் தான் மகிழ்ச்சியாக இருக்க முடியுமா? கண்டிப்பாக யாரும் மகிழ்ச்சியாக இருக்க முடியாது. இந்தமாதிரி எதிர்மறையான எண்ணங்களை, சொல்களை, செயல்களை இந்தப் பிறவியில் நாம் செய்திராவிடினும் கடந்த பிறவிகளிலாவது (ஜென்மம்) நாம் இதைச் செய்திருப்போம்.

எமது வாழ்க்கையை நாம் முதலில் ஆரம்பிக்கும் போது எமது தந்தையாகிய இறைவன் எமது கணக்கில் 100% சந்தோசம் என்ற செல்வத்தை வைப்புச் செய்தார். எமது ஒவ்வொரு செயலாலும் அது குறைந்து வரும்போது, மகிழ்ச்சியையும் இழக்கின்றோம். சிலவேளைகளில் நல்ல செயல்களால், எண்ணங்களால் எமது வைப்பு அதிகரித்தாலும், அடுத்த நிமிடமே செயலால் அது குறைத்து விடும். இது சாண் ஏற முழம் சறுக்குவது போலாகும். இந்த வைப்பு நிலுவை எதிர்மறையில் (Negative balance) வரும் போது அடிதடிதான்.

சிலர் கூறுவார்கள் "எனக்கு முற்பிறவியில் நம்பிக்கையில்லை". இப்படிக் கூறுவதால் அவர்களின் செயல், வினை, பயன்களில் இருந்து தப்பமுடியாது. நீங்கள் எதைச் செய்தீர்களோ அதன் பலனை நீங்கள் அனுபவித்துத்தான் தீரவேண்டும். இதுவிதி. விஞ்ஞான விளக்கம் தேவையாயின் நியூட்டனின் 3ஆம் விதியைப் பாருங்கள். அதாவது "எந்தவொரு தாக்கத்திற்கு சமனும் எதிருமான மறுதாக்கம் உண்டு"

உதாரணமாக, நீங்கள் கடன்அட்டையில் (Credit cards) பொருட்கள் வாங்கிவிட்டு தெரியாததுபோல் இருந்தால் அந்த கடன் உங்களை விட்டு தீராது. கடன் கொடுத்தவர் நீங்கள் அதைத் திருப்பிக் கட்டும் வரையில் சும்மா இருக்கமாட்டார். ஏனெனில் உங்கள் கடனுக்கான பதிவு அவரிடம் இருக்கிறது. உங்கள் கடன் தீரும்வரை கடன் நோட்டீஸ், துன்பம் எனும் பேரில், வந்து கொண்டுதான் இருக்கும். 'கடன்பட்டார் நெஞ்சம் போல் கலங்கினான் இலங்கை வேந்தன்' என்று கூறுவது இதைத்தான் போலும். இந்த எதிர்மறையான கடன்களை தீர்த்து, எவ்வாறு தொடர்ச்சியான மகிழ்ச்சியை அனுபவிப்பது? அதற்கு முதலில் வேறு கடன்கள் பெறுவதைத் தவிர்க்க வேண்டும். அதாவது உங்கள் எண்ணம், சொல், செயல் மாறவேண்டும்.

அதற்கு முதல்படி, உங்களை நீங்களே அறிதல் ஆகும். (Self-realization) நீங்கள் யார்? உங்கள் சிறப்பியல்புகள் என்ன? என்பதை அறிதல். நான் ஒரு புள்ளி வடிமான ஜோதி ரூபம் கொண்ட அமைதியான ஆத்மா. எமது உண்மையான குணங்களான, அன்பு, அமைதி, சந்தோசம், இனிமை, சாந்தம், பணிவு என்பன போன்றவையாகும்.



நாம் ஏன் அமைதியை, சந்தோசத்தை திரும்பத் திரும்ப தேடுகின்றோம்? ஏன் என்றால் நாம் அதை முன்பு ருசித்திருக்கின்றோம். இவை எமக்குத் சொந்தமானவை. அந்த ருசிதான் மீண்டும் மீண்டும் எம்மைத் தேடவைக்கிறது. சூடுகண்ட பூனை அடுப்பங்கரையை நாடாது என்று கூறுவார்கள். இது பழமொழி. ஆனால், ருசி கண்ட பூனை அடுபங்கரைக்கு வராமல் இராது இது புதுமொழி. இது தான் எம் கதை.

யேசுநாதர் கூறினார்; "தட்டுங்கள் திறக்கப்படும், கேளுங்கள் கொடுக்கப்படும்". ஆமாம்! உங்கள் இதயக்கதவுகளைத் தட்டுங்கள். நீங்கள் யார் என்று உங்களையே கேளுங்கள். நீங்கள் வெளியே தேடும் அன்பு, அமைதி, இனிமை, சந்தோசம் உங்களுக்குள்ளே இருக்கின்ற சொத்து என்பதை அறிவீர்கள். எனவே உங்களுக்குள்ளே தேடுங்கள். கடலுக்கு அடியே செல்லச் செல்ல முத்துக்கள் கிடைப்பது போன்று, நீங்கள் உங்களுக்குள்ளே மூழ்குவீர்களாயின் நீங்கள் வெளியே தேடிய அமைதி, இனிமை, அன்பு போன்ற முத்துக்களையும் பல இனிய அனுபவங்களையும் பெறுவீர்கள். இது பலரது அனுபவத்தில் அறிந்த உண்மை. இதனால் இன்னுமொரு நன்மை என்னவெனில் நீங்கள் உங்களைப்பற்றி ஆராய்வதில் தீவிரமாக இருப்பதினால் மற்றவர்கள் என்ன செய்கிறார்கள் என்று பார்க்க உங்களுக்கு நேரமிருக்காது. எமது சந்தோசம் குறைவதற்கு இதுவும் ஒரு முக்கிய காரணமாகும்.

நாம் எங்களைப்பார்க்கத் தவறும் போதுதான் அந்த நேரத்தை மற்றவர்களைப் பார்ப்பதிலும், மற்றவர்களின் குறைகளைப் பார்ப்பதிலும் நேரத்தை வீணடிக்கின்றோம். உண்மையில் மற்றவர்களைக் குறை கூறும் போது அதே குறைபாடு தங்களிலும் இருக்கின்றது என்பதை அவர்கள் அறிவதில்லை. உதாரணமாக என்பொருள் மாதிரி இன்னொருவரிடம் அது இருக்கும்போது அதை எம்மால் இலகுவாக அடையாளம் காணமுடிகிறது. அதே போலத்தான் எம்மில் இருக்கும் குறைபாடு மற்றவர்களிடம் இருக்கும்போது அது எமக்குத் தெளிவாகத் தெரிகிறது. இதிலிருந்து விடுபடுவதற்கு ஒரே வழி உங்களை நீங்களே அறிவதே. அதற்கு உங்களை நீங்களே சோதனை செய்யுங்கள். உங்களிடம் மனம் விட்டுப் பேசுங்கள். உங்கள் சகல பிரச்சனைக்கும் தீர்வு உங்களிடம் இருந்ததே வெளிவரும். இதன் பிறகு நீங்கள் இலகுவான தன்மையை, அமைதியை மகிழ்ச்சியை அனுபவிப்பீர்கள். மற்றவர்களிடம் மனம்விட்டு பேசினால் மனப்பாரம் தீரும் என்பார்கள். "உங்கள் மனமே உங்கள் சிறந்த நண்பன்" அவனிடம் மனம்விட்டு உரையாடுங்கள். நீங்கள் ஆழ்ந்த அமைதியை உணர்வீர்கள்.

நான் யார்? நான் ஒரு புள்ளி வடிவமான ஆத்மா. எனது நெற்றியின் நடுப்பகுதியில் திலகம் இடும் இடத்தில் அமர்ந்திருக்கின்றேன். எனது குணங்களானவை, அன்பு, அமைதி, மகிழ்ச்சி, இனிமை என்பனவாகும். இந்த நிலையில் இருத்தலே ஆத்ம உணர்வு ஆகும். (Soul conscious) காமம், கோபம், அகங்காரம், பொறாமை, உலோபம் அனைத்தும் இந்த உடலுடன் சம்பந்தப்பட்டது. இது தேகஉணர்வு ஆகும். (Body conscions). எமது பல பிரச்சினைகளுக்கு காரணம் இவையே. நான் என்ற அகங்காரமே அனைத்திற்கும் காரணம். ஒரு முறை ஓர் அரசன் காட்டிற்கு செல்லும் வழியில் ஒரு முனிவரை கண்டான். அவன் அவரிடம் கேட்டான். "சாமி எனக்கு எந்நாட்டில் பல பிரச்சினைகள் உள்ளன. இவற்றிக்கு தீர்வுகாணுவது எப்படி?" என கேட்பான். அதற்கு முனிவரோ "நான்" போனால் எல்லாம் சரிவரும் என்றார். அரசனுக்கு ஒன்றும் புரியாமல் இருக்கவே முனிவர் விளக்கம் அளித்தார். "நான் போவதால் ஒன்றும் நடைபெறப்போவதில்லை. ஆனால், உன்னில் இருக்கும் "நான்" போவதால் ஒன்றும் நடைபெறப்போவதில்லை. ஆனால், உன்னில் இருக்கும் "நான்" என்ற அகங்காரம் போனால் எல்லாம் சரிவரும் என்றார். இதற்கு ஒரேவழி எமது உண்மையான உணர்வான ஆத்ம உணர்வுக்கு வருவதே. இதற்கு பயிற்சி மட்டுமே தேவை. இந்த உணர்வை நீங்கள் அனுபவிப்பீர்களாயின் இந்த உலகில் எந்தத் தடையும் உங்களை நெருங்காது. வெற்றிகள் உங்கள் கழுத்தில் மாலையாக விழும். நீங்கள் இனிய ஆனந்தத்தை அனுபவிப்பீர்கள்.

நாம் மகிழ்ச்சியாக இருப்பதற்கு அடுத்த வழி, இறைவனை அறிதல். இது மிகவும் இலகு. நீங்கள் உங்களை அறிந்தீர்களாயின் இறைவனை அறிவது மிகவும் இலகு. நீங்கள் உங்களை முழுமையாக அறிந்து ஆத்ம உணர்வில் இருப்பீர்களாயின் நீங்கள் தெய்வீக குணங்களைக் கொண்டிருப்பீர்கள். இந்நிலையில் உங்கள் எண்ணம், சொல், செயல் ஒன்றும் தவறாது. இந்த நிலையில் இருக்கும்போது கடவுளை நாம் தேடவேண்டியதில்லை. அவரின் தொடர்பு எமக்கு தாமாகவே வரும். ஏனெனில், ஜீவாத்மா நாமும் புள்ளியான ஜோதி ரூபம். பரமாத்மா இறைவன் சிவனும் ஜோதி ரூபம் கொண்டவர். இனம் இனத்தைச் சேர்வது போல் நீங்கள் மிக நெருங்கிய தொடர்பை அனுபவிப்பீர்கள். இறைவனும் கலந்திருக்கும் இன்பமே இனிமையானதும், சுவையானதும், நிலையானதும். இதுவே பேரானந்தம். இதுவே பேரின்பநிலை.

குறிப்பு: இந்த நிலை முனிவர்கள் மட்டும்தான் அனுபவிக்கும் நிலையில்லை. ஒவ்வொரு சாதாரண மனிதனும் தொடர்ச்சியான பயிற்சியால் இதை அனுபவிக்கலாம். இது பலர் தமது அனுபவத்தில் அறிந்த உண்மை. இதற்கு நம்பிக்கையுடன் கூடிய பயிற்சி மட்டுமே தேவை. சிலர் கூறுவார்கள் இது வயது போனவர்கள் செய்யும் வேலை. ஆனால் இறைவவைத் தேடுவதற்கு வயதெல்லை என்பது இல்லை. வயது போனவர்கள்தான் இறைவனைத் தேடலாம் என்றால் ஞானசம்பந்தல் மூன்று வயதில் ஞானப்பால் குடித்திருக்க முடியாது. விவேகானந்தர் ஆன்மீகத்தில் உலகப்பிரசித்திபெற்றிருக்க முடியாது.

## கீதாகரன் நடராஜா

பலர் என்னைப் பார்த்து கூறினார்கள். 'It's too early for you' நான் அவர்களை பரிதாபத்துடன் பார்ப்பேன். ஏனென்றால், ஒரு நேரத்தில் அவர்களுக்கு 'it's too late for you' என்று சொல்ல வேண்டியிருக்கும். நல்ல செய்வதற்கு நேரம், காலம், வயது பார்த்திருக்க முடியாது.

எனவே எமது வாழ்க்கையில் நிரந்தரமான உண்மையான அமைதி, மகிழ்ச்சி வேண்டுமாயின் உங்களை நீங்களே, அறிந்து இறைவனுடன் தொடர்பை ஏற்படுத்துதல் ஆகும். இது மிகவும் இலகு. தியானப் பயிற்சி மட்டுமே தேவை. பிறவி பிறவியாக நாம் செய்த பாவங்களே எமது மகிழ்ச்சிக்குத் தடையாக உள்ளது. அதை இறைவனின் நினைவால் மட்டுமே அழிக்கலாம். இறைவனே கீதையில் கூறுகிறார்; "என்னையே நினைவு செய்யுங்கள். உங்கள் சகல பாவங்களிலிருந்தும் விடுதலை அழிக்கின்றேன்". எமது பாவங்கள் அழிந்தபின் எமது மகிழ்ச்சிக்குத் தடையே இல்லை பின் என்றென்றும் ஆனந்தமே. நீங்கள் வேறு எந்த மகிழ்ச்சியை அனுப வித்தாலும் இந்த உண்மையை உணர்ந்து உபயோகிக் காவிடின் நிரந்த மகிழ்ச்சி என்பது கானல் நீர் போலத்தான் இருக்கும். எமது வாழ்க்கையில், துன்பங்கள், குழப்பங்கள் தொடர்ந்து கொண்டேதான் இருக்கும். ஆனால், இந்த அறிவின்மூலம், நாம் அதை வெற்றி கொள்ளலாம். இராஜயோக தியானம் இதில் முன்னனி வகிக்கின்றது.


நடப்பதெல்லாம் நன்மைகே என்ற உணர்வைக் கொண்டிருங்கள். உங்கள் மனதை சோர்வடைய செய்து விடாதீகள். கீதையில் இறைவன் குறிப்பிடுகிறார்.

தொடர்ச்சி 18ம் பக்கம்

# சரித்திரமான தனி மனித உணர்வுகள்

அன்றாட வாழ்க்கையில் தனி மனித உணர்வுகள் ஒவ்வொருவரையும் ஆட்கொண்டு, வாழ்க்கை இன்ப மாகவோ, துன்பமாகவோ அமைய அந்த உணர்வுகள் காரணமாக அமைந்து விடுகின்றன. ஆனால் சென்ற மாதத்தில் உலக சரித்திரத்தில் இடம் பெறும் இருவரின் பெயர்கள் பரபரப்பாக சர்வதேச ஊடகங்களில் பேசப்பட்டன. அவர்கள் யார் என்பது பற்றியும் சாதாரண மனித உணர்வுகளால் பாதிக்கப்பட்ட அவர்கள் எவ்வாறு சரித்திரத்தில் இடம் பெறக்கூடிய அளவிற்கு நடந்து கொண்டார்கள். அதற்கான காரணங்கள் என்ன? அந்த இருவரும் முறையே மார்க் பெல்ட (Mark Felt) மைக்கல் ஜாக்சன் (Michael Jackson) ஆவார்கள்.

1972ஆம் ஆண்டு, உலக வல்லரசு நாடான அமெரிக்காவில் தேர்தல் இடம்பெற இருந்த நேரம், வியட்நாம் போரில் தோல்வி காணும் அளவிற்கு தள்ளப்பட்ட நிலையில் அமெரிக்கா இருந்த கால கட்டத்தில் ஜனாதிபதியாக Richard Nixon தெரிவு செய்யப்படவும், வியட்நாம் யுத்தத்திற்கு சாவுமணி அடிக்கப்படவும் அமெரிக்க மக்கள் ஆவலுடன் காத்திருந்த வேளையில் அமெரிக்காவின் துப்பறியும் இலாகாவான FBI இன் (Federal Bureau of Investigation) தலைமைப் பொறுப்பில் இருந்த J. Edgar Hoover உடல்நலம் குன்றி இறந்து விடுகின்றார். அப்படிப்பட்ட முக்கியத்துவம் வாய்ந்த தலைமைப் பொறுப்பிற்கு உடனடியாக ஒருவரை தெரிவு செய்ய வேண்டிய கடமை அதிபராக இருந்த Richard Nixon னிடம் வருகின்றது. அனேகமாக இப்படியான ஒரு தருணத்தில் தலைமைப்பதவிக்கு அடுத்த இடத்தில் இருப்பவருக்கு அந்த தலைமைப்பதவி பொறுப்பைக் கொடுத்து பதவி உயர்வு செய்து கொடுக்கப்படும். அல்லது தகுதியான வேறொருவர் தெரிவு செய்யப் படுவது வழக்கம். இப்படியான தருணங்களில் தான் அரசியலில் உயர்பதவி வகுப்பவர்கள் அதிலும் ஜனாதிபதி போன்றதொரு பதவியில் இருப்பவர் தனது முழு அதிகாரத்தையும் நிலை நிறுத்தும் வகையில் தனக்கு நன்றியாக நடப்பவர்களை அல்லது தனது பார்வையில் தகுதியானவர் என்று தெரிபவர்களை FBI போன்ற பொறுப்புமிக்க அரச சேவை தாபனங்களுக்கு தலைவராக நியமிப்பது வழக்கம். அரசியலில் இது சகஜம் என்ற போதும் காலம் காலமாக பலர் இப்படியான முடிவுகளால் பாதிக்கப்பட்டு வந்திருக் கின்றார்கள். அதிலும் அமெரிக்க ஜனாதிபதி போன்ற வர்களின் முடிவை எதிர்த்து போராடவும், நியாயம் கேட்கவும் யாரும் முனைவதில்லை. தாம் தமது தொழிலை முறையாகச் செய்தும், தலைமைப்பதவிக்கு தகுதி வாய்ந்தவர்களாக இருந்த போதும் தமக்கு வர வேண்டியதை தட்டிப்பறித்த கதையாக போனதே என்று கவலைப்படுவதை தவிர வேறொன்றும் அவர்களால் செய்ய முடிவதில்லை.



Mark Felt ம் அப்படியான ஒரு முடிவினால் பாதிக்கப்பட்டு இருந்தார். J. Edgar Hooverற்கு அடுத்து அந்தப்பதவியில் இருப்பதற்கு எல்லா வகையிலும் தகுதியான வராகத்தான் அவர் இருந்தார். ஆனால் Richard Nixon இன் முடிவு வேறாக இருந்தது. அது Mark Felt இனை வெகுவாக மனதளவில் பாதித்தது. தனக்கு வர வேண்டிய பதவி கைவிட்டு போன ஆதங்கத்தில் 1973ஆம் ஆண்டு தனது பதவியைத் துறந்து FBI யில் இருந்து விலகிக் கொண்டார். இதற்கிடையில் 1972ஆம் ஆண்டு நடைெ- பற்ற ஜனாதிபதிதேர்தலில் வென்றுவிடவேண்டும் என்ற பேராசையில் இருந்த Richards Nixon ஒரு காரியம் செய்தார். தனது அதிகாரத்தை பாவித்து FBI போன்ற அரச உழவு தாபனங்களின் உதவியுடன் தேர்தலில் போட்டியிட்ட எதிர்கட்சியான ஜனநாயக கட்சியின் தலைமை அலுவலகம் Washington தலைநகரில் Water Gate என்ற கட்டிடத்தில் இயங்கி வந்தது. அந்த அலுவலகத்தில் என்ன முறையில் ஜனநாயக கட்சியினர் தேர்தல் சதுரங்க காய்களை நகர்த்துகிறார்கள் என்று அறிந்து கொண்டால் அது தனது வெற்றிக்கு உதவியாக இருக்கும் என்ற பேராசை கொண்ட Nixon ஜனநாயக கட்சி அலுவலகத்தில் ஒலிப்பதிவு கருவிகளை இரகசியமாக ஒளித்துவைத்து உரையாடல்களை பதிவு செய்து அதில் கிடைத்த தகவல்களை தனது தேர்தல் சதுரங்கத்தில் பாவித்து வெற்றியடைய உபயோகப்படுத்தினார். இந்த நடவடிக்கைகள் அந்தக்கால கட்டத்தில் FBI யின் இரண்டாவது தலைமைப் பொறுப்பில் இருந்த Mark Felt நன்றாகவே அறிந்து வைத்திருந்தார். பதவியை பறித்த அதிபர் Nkxonக்கு பாடம் புகட்ட எண்ணினார். அதற்கு சரியானவழி என்று Washington Post என்ற பத்திரிகையின் நிருபர்களாக இருந்த துடிப்பு மிக்க இளைஞர்கள் Bob Wooddward, Carl Bernstein ஆகியவர்களுடன் இரகசியமாக தொடர்பு கொண்டு வேண்டிய ஆதாரங்களை கொடுத்து அதன் மூலம் அதிபர் Nixonனின் தேர்தல் ஊழலினை உலகறியச் செய்து அதனால் Nixon 1974 ஆம் ஆண்டு பதவி துறக்கவும் காரணமாக இருந்தார். இரகசியங்களை தமக்கு தருபவரின் பெயர் வெளியில் தெரியக் கூடாது என்பதற்காக Mark Felt றிற்க்கு கொடுக்கப்பட்ட புனை பெயர் Deep Throat என்பதாகும். அப்படி அவர் செய்தது சரியா, பிழையா என்ற விவாதத்தில் குடியரசுக் கட்சியினர் பாதிக்கப்பட்டதால் அவர் செய்தது தவறு என்றும், தேர்தலில் தோற்ற ஜனநாயகக் கட்சியினர் அவர் ஓர் உத்தம புருஷன் என்று வாதாடுவது இன்றும் நடைபெறுகின்றது. தானே தான் அந்த Deep Throat என்ற உண்மையை தான் இறக்கும் முன் உலகிற்கு தனது வாயாலேயே தெரியப்படுத்தி விட வேண்டும் என்ற காரணத்திற்காக தனது 94-வது வயதில் சென்ற மாதம் உண்மையை உலகத்திற்கு கூறி அமெரிக்க சரித்திரத்தில் ஒரு ஜனாதிபதி பதவியை துறந்தது என்ற நிகழ்வு இடம்பெற காரணமாக இருந்த உண்மையை உலகறியச் செய்தார். இது ஆதங்கம் என்ற மனித உணர்வு படைத்த சரித்திரம்.

## சாதாரண மனிதனின் பார்வையிலிருந்து

பிள்ளைப் பிராயத்தில் இருந்தே தனது தந்தையின் கண்டிப்பினால் இசைத்துறையில் அதீத கவனம் செலுத்தப்பட்டும், அதன் மூலம் உலகின் மிக பிரபலமான இசை மேதை "King of Pop" என்று வர்ணிக்கப்பட்டவர் Michael Jackson. ஆயிரம் இருந்தும், வசதி கள் இருந்தும் No Piece of Mind என்ற 'ஞான ஒளி' திரைப்படத்தில் சிவாஜி அவர்களால் பேசிய வசனம் போல சகல வசதிகள் இருந்தும், பணம், புகழ் இருந்தும் Michael Jackson தான் இழந்துவிட்ட பிள்ளை பராயத்தை எண்ணி ஏங்கினான். உடல்வளர்ந்தும், அறிவு வளராதவன் போல அவனது நடை, உடை, பாவனைகள் காணப்பட்டன. தனது புகழையும், வசதியையும் தனக்கு சாதகமாக வைத்து கொண்டு சிறுபிள்ளை களுடன் சிநேகம் வைக்கவும், அவர்களுக்கு வேண்டியதை வாங்கி கொடுத்து அவர்களை மகிழ்வூட்டியும், அதனால் தானும் மகிழ்ந்து இருந்த Michael இன் வாழ்க்கையில் 1992ஆம் ஆண்டு முதல் புயல் வீசத் தொடங்கியது. சிறுவர்களுடனான பாலியல் உறவு வைத்தான் என்று பாதிக்கப்பட்ட ஒரு சிறுவனின் பெற்றோர் குற்றம் சுமத்தி வழக்கு தொடர்ந்தனர். அந்த வழக்கு விவாதத்திற்கு வந்தால் வேண்டப்படாத வகையில் விமர்சிக்கப் படலாம் என்பதை தவிர்ப்பதற்காக, 20மில்லியன் டொலர்களை கொடுத்து தனது பிள்ளையை இப்படியான உறவுகளுக்காக ஊக்கம் கொடுத்து அதன் மூலம் பணம் சம்பாதிக்க திட்டமிட்ட பெற்றோரின் ஆசையை, பணத்தை கொடுத்து Michael வாயடைக்க வைத்தான் என்று முன்பு கூறப்பட்டது.




அதே போன்றதொரு குற்றச்சாட்டு திரும்பவும் சென்றவருடம் வைக்கப்பட்டு பல மாதங்கள் வழக்காடு மன்றத்தில் இழுபட்டு ஊடகங்களுக்கும், வெறுவாய் சப்புபவர்களுக்கும் தீனி போட்டு இறுதியில் Michael நிரபராதி என்று தீர்ப்பு வழங்கப்பட்டது. அறிவு வளராத Michael சிறுவர்களுடன் பாழகும் போது குற்றம் இழைக்காமல், பாலுணர்வை தூண்டாத வகையில் நடந்து கொண்டிருந்தாலும் Michael இடம் இருந்து பணம் பறிக்க எண்ணியிருந்த பேராசை கொண்ட பெற்றோர்களின் தூண்டுதலினால் அவர்களின் பிள்ளைகளினால் Michael இடம் பால் உணர்வுகள் தூண்டப்பட்டும் அதனால் அவன் குற்றம் இழைத்திருக்கலாம். எது, எப்படியாக இருந்த போதும் "King of Pop" என்று மட்டும் சரித்திரத்தில் இடம் பெற்றிருக்க வேண்டிய Michael நிரபராதி என்று வழக்கில் தீர்வு கிடைத்தும் தகாத முறையில் பாலியல் வல்லுறவு கொண்டான் என்ற ஒரு சாதாரண மனித உணர்வினை கட்டுப்படுத்த முடியாதவனாக,பலரது மனங்களில் ஒரு குற்றம் இழைத்தவனாக சரித்திரத்தில் இடம் பெறப் போவது துரதிஷ்டமே Michael பட்ட அனுபவம் அவனுக்கும், பலருக்கும் பாடமாக அமையட்டும்.

பார்வைகள் தொடரும்.

*பயணம் தொடரும்...*

*ராம்ஜி*

*ஒரு சாதாரண மனிதன்*

- முகமலர்ச்சி, ஈகைக்குணம், இனியசொல், பிறரை இகழாத பண்பாடு ஆகிய நான்கு சிறப்புக்களும் உள்ளவர்களையே வாய்மையுள்ள குடிமக்கள் என்று வகைப்படுத்த முடியும்.
- யாழ்ப்பாணத்திலுள்ள ஊர்களின் பெயர்க் காரணங்களை விளக்கமாக எழுதியவர் ஆசுகவி கல்லடி வேலுப்பிள்ளை அவர்கள். இவ் ஊர்ப் பெயர் அகராதி யாழ்ப்பாண வைபவ கௌமுதி ஆகும்.
- 'ஆசியன்' தென்கிழக்காசிய நாடுகளின் கூட்டமைப்பு. 1967இல் இந்தோனேசியா, மலேசியா, பிலிப்பைன்ஸ், சிங்கப்பூர், தாய்லாந்து போன்ற நாடுகள் இணைந்த ஓர் பிராந்திய கூட்டமைப்பு.
- உலகப் பிரசித்தி பெற்ற 'இறுதி விருந்து' (The last super), 'மொனாலிசா' போன்ற ஓவியங்களை வரைந்தவர் லியனார்டோ டாவின்சியாகும். இத்தாலியில் ஏற்பட்ட மறுமலர்ச்சியின்போது இவரது படைப்புகள் வகித்த பங்கு முக்கியமானதாகும். இவர் வரைந்த மொனாலிசா ஓவியம் இப்போதும் பாரிஸ் நூதனசாலையில் இருக்கின்றது. மேலும் யுத்த டாங்கி, உலங்கு வானூர்தி ஆகியவை எவ்வாறு வடிவமைக்கப்படவேண்டும் என்பதையும் தீர்க்கதரிசனமாக வரைந்தார்.
- கோழையும் வீரனாவான் தன் உரிமைகள் பறிபோகும்போது.
- நம்மைத் தாழ்த்திப் பேசும் போது அடக்கமாய் இருத்தல் பெரிய காரியமன்று. நம்மைப் புகழ்ந்துரைக்கும் போது அடக்கமாய் இருத்தலே மிகப் பெரிய வெற்றியாகும்.




உங்கள் பிள்ளைச் செல்வங்களுக்கு எமது தாய் மண்ணுடன் ஒரு தொடர்பினை ஏற்படுத்த அல்லது உங்கள் ஓய்வு காலத்தை அங்கு இன்பமாகக் களித்திட இலங்கை இந்தியா போன்ற நாடுகளில் வீடு நிலங்களில் முதலிட எண்ணுகிறீர்களா? நம்பிக்கையுடன் தொடர்பு கொள்ளுங்கள்

ராம்ஜி - 416.230.1107

PARAM. G GNANASWARAN
Sales Representative

HOME LIFE GTA REALTY INC.
1711 McCowan Rd., Suite 206, Scarborough, ON

416.321.6969
905.670.9969
(Mississauga)
paramg@themathuram.com

# பிரேசில் வெற்றி வாகை!!!

## CONVEDERATION CUP - 2005

### விளையாட்டு செய்திகள்

2006ஆம் ஆண்டு ஜேர்மனியில் நடைபெறவிருக்கும் உலகக்கிண்ணப் போட்டிகளுக்கு முன்மாதிரியாக Confederation Cup போட்டிகள் நடைபெறுவது வழக்கம். இம்முறை மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்ற போட்டிகளின் அரைஇறுதியாட்டங்களில் இருந்து முக்கிய விபரங்களை இங்கு பார்ப்போம்.




Confederation கோப்பைக்கான கால் பந்தாட்டத்தில் போட்டியை நடத்தும் ஜேர்மனி மற்றும் ஆர்ஜென்டீனா அணிகள் அரையிறுதி ஆட்டத்துக்கான தகுதியைப் பெற்றன. ‘ஏ’ பிரிவுக்கான ஆட்டத்தில் 3 - 0 என்ற கோல் கணக்கில் ஆபிரிக்க சாம்பியன் துனீஷியாவைத் தோற்கடித்தது ஜேர்மனி. மைக்கேல் பல்லாக், பாஸ்டியன் ஸ்வென்ஸ்டிகர், மைக் ஹேன்கே ஆகியோர் தலா ஒரு கோல் அடித்து ஜேர்மனியின் வெற்றியின் முக்கிய பங்காற்றினர். மற்றொரு ஆட்டத்தில் அவுஸ்திரேலிய அணியை 4 - 2 என்ற கோல் கணக்கில் ஆர்ஜென்டீனா தோற்கடித்தது. லூசியானா பிகெரோ மூன்று கோல்களையும், ஜுவான் ரிகுலெம் (பெனால்டி) ஒரு கோலையும் வெற்றிக்காக அடித்தனர். தோல்வியுற்ற அவுஸ்திரேலிய அணியில் ஜான் அலோய்ஸி இரண்டு கோல்களையும் அடித்தார். இவ் வெற்றிகளை அடுத்து, ஆர்ஜென்டீனா, ஜேர்மனி அணிகள் தலா ஆறு புள்ளிகளுடன் ‘ஏ’ பிரிவில் முன்னிலை பெற்றன. வெற்றி பெறும் அணி, ‘பி’ பிரிவில் வலுவானதாகத் பிரேசில் அணி முன்னேறுகிறது.

Confederation கோப்பைக்கான கால் பந்தாட்டத்தில், ஜப்பானுக்கு எதிரான முக்கியமான லீக் ஆட்டத்தில் வெற்றி தோல்வியின்றி முடிவுற்றதால், அரையிறுதி வாய்ப்பை, பிரேசில் உலக சாம்பியனாக உறுதி செய்தது. இதையடுத்து மொத்தம் நான்கு புள்ளிகளுடன் ‘பி’ பிரிவில் பிரேசில் இரண்டாம் இடத்தைப் பிடித்தது. ‘சமநிலை’ (Draw) கண்ட ஜப்பான் அணியும் தான் விளையாடிய மூன்று ஆட்டங்களில் தலா ஒரு வெற்றி, ஒரு சமநிலை, ஒரு தோல்வியைப் பெற்று நான்கு புள்ளிகளைச் சேர்த்திருந்தது. ஆனால் கோல் சராசரியில் பிரேசில் முன்னிலை பெற்றது. இதனால் ஜப்பானின் அரையிறுதி வாய்ப்பு பறிபோனது. மெக்ஸிக்கோ - கிரீஸ் அணிகளுக்கு இடையிலான மற்றொரு லீக் ஆட்டம் கோலின்றி சமனாக முடிந்தது. என்றாலும் மெக்ஸிக்கோ மொத்தம் ஏழு புள்ளிகளைச் சேர்த்து ‘பி’ பிரிவில் முதலிடத்தை தக்கவைத்துக் கொண்டது. பிரேசில் ஜப்பான் அணிகளுக்கு இடையிலான ஆட்டம் மிகவும் விறுவிறுப்பாக அமைந்திருந்தது. வெற்றி பெறும் அணி அரையிறுதி வாய்ப்பை பெறும் என்ற பின்னணியில் ஆட்டம் தொடங்கியது. இதையடுத்து ஜப்பான் வீரர்கள் தொடக்கத்திலிருந்து அதிரடியாக ஆட்டத்தை மேற்கொண்டனர். என்றாலும் ராபினோ அடித்த கோலால் பிரேசில் முன்னிலை பெற்றது. அடுத்த சில நிமிடங்களில் கோல் எல்லைக்கு 30 மீற்றர் தூரத்தில் இருந்து ஜப்பான் வீரர் நகமுரா பலமாக அடித்த பந்து சீறிப் பாய்ந்து கோலானது. இதையடுத்து இரு அணிகளும் தலா ஒரு கோலுடன் சமநிலை பெற்றன. 32-வது நிமிடத்தில் ரொனால்டினோ அடித்த கோல் மூலம் பிரேசில் மீண்டும் முன்னிலை பெற்றது. அதுவே முதல் பாதியில் கடைசி கோலாக அமைந்தது. ஆட்டம் முடிய இரண்டு நிமிடம் இருக்கையில் ஜப்பான் அணியின் பதிலி(sub.) வீரர் ஒகுரா ஓங்கி அடித்த பந்து, கோல் எல்லைக்குள் சென்று பிரேசில் வீரர்களை அதிர்ச்சியடையச் செய்தது. தொடர்ந்து அந்த அணியினர் போராட்டம் நிகழ்த்தினர். ஆனால் பிரேசில் வீரர்கள் தற்காப்பில் கவனம் செலுத்தி ஆட்டத்தை சமனில் முடித்தனர்.

**எஸ். கணேஷ்**

முதல் அரையிறுதி ஆட்டத்தில் பிரேசில் 3 - 2 என்ற கோல் கணக்கில் போட்டியை நடத்தி ஜேர்மனியைச் சாய்த்தது. அட்ரியானோ இரண்டு கோல்களையும், ரொனால்டினோ ஒரு கோலையும் அடித்து பிரேசிலுக்கு வெற்றி தேடித் தந்தனர். ஜேர்மனி அணிக்காக லுகாஸ் போடோல்ஸ்கியும், மைக்கேல் பேல்லாக்கும் கோல் அடித்தனர். முதல்பாதியில் இருஅணிகளும் தலா இரண்டு கோல்களை அடித்திருந்தன. ஆட்டம் முடிய 14 நிமிடம் இருக்கையில் பிரேசில் வீரர் அட்ரியானோ அடித்த கோல், போட்டியின் வெற்றிக் கோலாக அமைந்தது. 42ஆயிரம் ரசிகர்கள் ஆட்டத்தைக் காண வந்திருந்தனர். ஆனால் ஜேர்மனி தோல்வியுற்றதால் பெரும்பாலானோர் ஏமாற்றத்துடன் திரும்பினர். “ஜேர்மனியை அதன் சொந்த மண்ணிலேயே தோற்கடிப்பது அற்புதமான விடயம். ஆட்டத்திறனைக் காட்டிலும் ஜேர்மனிக்கு எதிராக புத்தி சாலித்தனம் தேவையாக இருந்தது. அத்துடன் தொழில்நுட்பத்தையும் வெளிப்படுத்தி அணியினர் வெற்றி பெற்றனர்” என பிரேசில் அணியின் பயிற்சியாளர் கார்லஸ் அல்பர்டோ பெரைரா கூறினார். தோல்வியுற்றாலும் கிளின்ஸ்மானின் ஜேர்மனி அணியினர் ரசிகர்கள் பாராட்டும் படியான ஆட்டத்தை வெளிப்படுத்தி, பலரது மனதில் இடம்பிடித்தனர்.

பிரேசில் 3 - 2 என்ற கோல் கணக்கில் ஜேர்மனியையும், ஆர்ஜென்டீனா 6 - 5 என்ற கணக்கில் மெக்ஸிக்கோ அணியையும் தோற்கடித்து இறுதி ஆட்டத்துக்கு முன்னேறின. உலகக் கோப்பையை ஐந்து முறை வென்றுள்ள பிரேசிலும், இரண்டுமுறை முன்னாள் உலக சாம்பியனான ஆர்ஜென்டீனாவும் 40-வது முறையாக சந்தித்துக் கொள்கின்றன. ஐரோப்பாவில் இவ்இரு அணிகள் மோதுவது நாலாவது முறை. இறுதி ஆட்டத்தில் பிரேசில் வெற்றி பெற்றால், பிரான்சுக்கு அடுத்தபடியாக ஒரே சமயத்தில் சர்வதேச கால்பந்து சம்மேளனத்தின் (ஃபிபா) சீனியர் பிரிவு பட்டங்கள் மூன்றை வென்ற இரண்டாவது அணியாகத் திகழும். அதாவது உலகக் கோப்பை, கான்டினென்டல் பட்டம் மற்றும் confederation கோப்பை ஆகியவற்றை வென்ற அணியாகத் திகழும். 2001இல் பிரான்ஸ் அச்சிறப்பை பெற்றுள்ளது.

ஜேர்மனியில் நடைபெற்றுவரும் Confederation கோப்பைக்கான கால்பந்துப் போட்டியின் ஆர்ஜென்டீனா இறுதிஆட்டத்துக்கு முன் னேறியது. அரையிறுதி ஆட்டத்தில் ஆர்ஜென்டீனா 6 - 5 என்ற கோல் கணக்கில் மெக்ஸிக்கோவை வென்றது. இதன்மூலம் இறுதி ஆட்டத்தில் உலக சாம்பியன் பிரேசிலை சந்தித்தது ஆர்ஜென்டீனா. அரை இறுதியின் ஆட்டநேர இறுதியில் ஆர்ஜென்டீனாவும், மெக்ஸிக்கோவும் தலா ஒரு கோல்கள் அடித்து சமநிலையில் இருந்தன. அதன்பிறகு கொடுக் கப்பட்ட பெனால்டி வாய்ப்பில் மெக்ஸிக்கோ ஐந்தில் நாலு வாய்ப்பைக் கோலாக்கியது. அதே நேரத்தில் ஆர்ஜென்டீனா ஐந்து வாய்ப்புகளை கோலாக்கி வென்றது. இதன்மூலம் இறுதிச் சுற்றில், தென் அமெரிக்காவின் மிகவும் வலுவான இருநாடுகள் மோதல் என்ற சிறப்பை இறுதியாட்டம் பெற்றது. முன்னதாக நடைபெற்ற குழுப்பிரிவு ஆட்டத்தில் பிரேசிலை வென்ற மெக்ஸிக்கோ, ஆர்ஜென்டீனாவுக்கு எதிரான அரைஇறுதி ஆட்டத்தின் தொடக்கத்தில் கோல் அடித்து முன்னிலை பெற்றது. ஆனால் ஆர்ஜென்டீனா அடுத்த சில நிமிடங்களில் அதை சமன் படுத்தியது.



### ஜனேட்டி மகிழ்ச்சி :

தனது 100-வது ஆட்டத்தில் விளையாடும் ஆர்ஜென்டீனாவின் ஜேவியர் ஜனேட்டி, இந்த வெற்றி தனக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளிப்பதாகக் கூறியுள்ளார். டிஜோ சிமியோனுக்குப் (106 முறை) பிறகு, ஜனேட்டி 100போட்டிகளில் விளையாடும் இரண்டாவது ஆர்ஜென்டீனா வீரராகிறார் .

## பிரேசில் வெற்றி வாகை சூடியது!

2005ஆம் ஆண்டுக்கான Confederation கோப்பை கால்பந்துப் போட்டியில் பிரேசில்



பட்டத்தைக் கைப்பற்றியது. ஜேர்மனியில் உள்ள பிராங்பேட்டில் புதன்கிழமை இரவு நடை-பெற்ற இறுதி ஆட்டத்தில் ஆர்ஜென்டீனாவை 4 - 1 என்ற கோல் கணக்கில் பிரேசில் தோற்கடித்தது. அட்ரியானோ (11-வது நிமிடம்), காகா (16-வது நிமிடம்) ஆகியோர் அடித்த கோல்களால் முதல்பாதில் 2 - 0 என பிரேசில் முன்னிலை பெற்றிருந்தது. பிற்பாதி ஆட்டம் தொடங்கியதும் ரொனால்டினோ அடித்த கோல் மூலம் பிரேசில் மேலும் முன்னிலை பெற்றது. 63-வது நிமிடத்தில் அட்ரியானோ மீண்டும் ஒருகோல் அடித்து அணியின் எண்ணிக்கையை உயர்த்தினார். புள்ளிவிபரம் 4 - 0. அடுத்த இரண்டு நிமிடத்தில் ஆர்ஜென்டீனா வீரர் பேப்லோ அய்மார் கோல் அடித்து பிரேசில் அணியின் முன்னிலையை சற்றுக் குறைத்தார். அதுவே ஆட்டத்தின் கடைசி கோலாகவும் அமைந்தது. 48ஆயிரம் ரசிகர்கள் ஆட்டத்தைக் காண திரண்டிருந்தனர். இவ் வெற்றிமூலம் இம்மாதத் தொடக்கத்தில் நடைபெற்ற உலகக்கோப்பை தகுதிப் போட்டியில் பெற்ற தோல்விக்குப் பிரேசில் பழிதீர்த்துக் கொண்டுள்ளது. பிரேசில் அப்போட்டியில் 1 - 3 என தோல்வியுற்றது. Confederation கோப்பையை பிரேசில் வெல்வது இது இரண்டாவது முறை. அதே சமயம் 1993 இல் கோபா அமெரிக்க கோப்பையை வென்றதற்குப் பிறகு பெரிய அளவிலான வெற்றி எதையும் ஆர்ஜென்டீனா பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.









# புதிய ஆதனம் வாங்கும் விற்கும் பத்திரத்தில் ஒப்பமிடும்....

## தொடர் - 210

சென்ற இதழின் தொடர்ச்சி

11. சிலரின் விருப்பப்படி, வீட்டிற்கு முன்பாக Hydro Transformer, Fire Hydrant, Community Mailbox, Street Light Post வரக்கூடாது என விரும்பினால் அவற்றையும் எழுதிக்கொள்ள முடியும்.

12. மேலும் Lot premium என மேலதிகமாக நிலத்திற்கு கூட்டினால் Lot premium என்னத்திற்கு என்று குறிப்பிடல் வேண்டும். உதாரணமாக பெரிய அகலம், நீளம், சிறந்த அமைவிடம், அழகான View, Golf course, சோலைகள், அருவி போன்றவற்றைக் கொள்ளலாம்.

13. Appliances எல்லாம் பொருத்திக் கொடுக்க வேண்டும் என எழுதிக்கொள்ளலாம்.

14. ஆதனம் விற்க இருக்கும் இடத்தில் ஆதன முதலாளியால் நிர்ணயிக்கப்பட்டவர் பொதுவாக ஓர் ஆதன முகவராக இருத்தல் வேண்டும். ஏதும் சந்தர்ப்பத்தில் அவர்களால் ஏற்படும் தவறுகளிற்கு அவரின் காப்புறுதி நட்டஈட்டைக் கொடுக்கும். எனவே Site இல் இருப்பவர் ஓர் ஆதன முகவரா என்பதனை உறுதிசெய்து கொள்ளல் வேண்டும். ஏதாவது Upgrades தருவதாக இருந்தால் அவற்றை எழுத்தில் பெறுதல் வேண்டும்.

15. விற்றல் வாங்கல் பத்திரத்தில் கையொப்பமிடும்போது Completion Date or Closing Date ஒன்று தரப்படும். அனேகமான சந்தர்ப்பங்களில் இந்த திகதி மாற்றப்படக் கூடும். ஆனால் திகதியை மாற்றும் போது சில நிபந்தனைகள் உண்டு. Completion Date, ஐ நீடிக்கலாம். ஆதனம் அமைப்பவரால் வீடுகளாயின் 250 நாட்கள்வரை Completion Date நீடிக்கலாம். Condominium ஆக இருந்தால் Occupancy Completion Date இரண்டு வருடங்கள் வரை நீடிக்க முடியும். உங்கள் வீடு விற்க இருந்தால் இதற்கேற்ப வீடு, கூட்டகத்தை விற்க தீர்மானிக்கலாம். மேலதிக சங்கடங்களை, தவிர்ப்பதற்கு ஆதன அமைப்பாளருடன் (Construction Company) தொடர்ந்து தொடர்பு கொண்டு இருப்பது நல்லது.



16. ஆதனம் கட்டப்பட்டுக் கொண்டு இருக்கும் நேரத்தில் வாங்கியவர்களை உள்ளே செல்வதை கட்டிட அமைப்பாளர் பொதுவாக விரும்புவதில்லை. காப்புறுதியைக் காரணம் கூறுவார்கள். இருந்தும் அவர்களின் உதவியுடன், கட்டும்போது உள்ளே சென்று பார்ப்பது நல்லது. இதனால் வீடு அமைப்பாளர் விடும் தவறுகளை ஆரம்பத்திலேயே தவிர்த்து விடலாம். குறைந்தது 2 அல்லது 3 தடவைகள் வீட்டைச் சென்று பார்ப்பது சிறந்ததாகும்.

17. அனேகமான ஆதன விற்பனையாளர்கள் அடமானத்திற்கு Pre approval கடிதம் கேட்பது இயல்பு. அடமானத்திற்குரிய approvalஐ செய்து வைத்திருப்பது நல்லது. இந்த சந்தர்ப்பத்தில் உங்களின் Credit இந்த நிலமையையும் அறியக்கூடிய சந்தர்ப்பம் உண்டு. ஏதாவது பிந்திய கொடுப்பனவு இருந்தால் (Late payments) இந்த சந்தர்ப்பத்தில் இவற்றை திருத்தி கொள்ளலாம்.

18. முதல் தடவை வீடு வாங்குபவர், $20,000 வரை RRSP இல் இருந்து பெற்றுக்கொள்ளலாம். தம்பதியினர் $40,000 வரை பெறலாம். இதனையும் மனதில் வைத்துக் கொள்ளல் நல்லது. (இது விற்றல் வாங்கல் பத்திரத்துடன் எதுவித தொடர்பும் கிடையாது.)

குறிப்பு - புதிய வீடு, கூட்டகம் வாங்கல், ஆதனத்தின் நிர்மாணம், புதிய காணியை சரிப்படுத்தல், நிலம் வெட்டுதல், சுவர் போடுதல், கூரை போடுதல் உள்ளே பூச்சு பூசுதல், நிலம் போடுதல், நிலப்படுக்கை போடுதல், குசினி அமைத்தல், குளியல் அறை அமைத்தல்... PDI (Pre delivery inspection) இற்கும் செல்லுதல், Closing Deal, Moving..... இவை தொடர்ச்சியான நிலைப்பாடு. பலரிற்கு மிகசந்தோசமான மாற்றங்களாக தெரியும். சிலரிற்கு Stressful ஆகப்படும். இவற்றை இலகுவாக செய்து முடிப்பதற்கு தகுந்த சட்ட வல்லுனர், ஆதன முகவர் அடமான முகவர்களை தெரிவுசெய்தல் சிறந்ததாக இருக்கும்.

## ரொறொன்ரோவில் புதிய வீடுகளின் விற்பனையில் வீழ்ச்சி

மே மாதத்தில் ரொறொன்ரோ பெரும் பாகப்பகுதியில் புதிய வீடுகளின் விற்பனையில் இறக்கம் ஏற்பட்டுள்ளது. வருடாந்த வியாபாரத்திற்கு ஏற்ப கணக்கிடும் போது 2005இற்குரிய புதியவீடுகளின் விற்பனை 77200 இலிருந்து 66100 ஆக குறைந்துள்ளது. புதிய வீடுகளின் விற்பனையின் தளர்ச்சிக்கு சில காரணங்களை முன்வைக்கலாம்.


**நாமும் நமது இல்லமும்**

**ராஜா மகேந்திரன்**

1. கட்டப்படும் நிலத்திற்குரிய விலையின் அதீத அதிகரிப்பு.
2. வீட்டு நிர்மாணத்திற்குரிய பொருட்களின் விலையில் ஏற்பட்ட பாரிய அதிகரிப்பு (உதாரணம் Steal, Lumber...)
3. தொழில் புரிபவர்களிற்குரிய வேதனத்தின் அதிகரிப்பு.
4. அனுவமிக்க தொழிலாளர்களின் பற்றாக் குறை.

இன்றைய நிலையில் வீடுவாங்குபவர்களின் நிலைமையில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. அதாவது புதிதாக கட்டப்படும் வீடுகள் வாங்குவதைவிட ஏற்கனவே கட்டப்பட்டு மக்கள் வாழுகின்ற வீடுகளை வாங்கவே விரும்பு கின்றார்கள். ஒப்பீட்டளவில் திருப்பி விற்கப்படும் வீடுகளின் விலை குறைவாகவே காணப்படுகின்றது.



# நாடகப் பார்வையாளர்

கடந்த இதழ் தொடர்ச்சி - 4)

அவையின்றி அரங்கில்லை. அரங்கம் என்ற சொல்லே அதன் முழுமை நிலையில் அவையையும் உள்ளடக்கியதுதான். அவை என்பது பார்வையாளர் கூட்டத்தை. ஆங்கிலத்தில் அவையைக் குறிக்கும் audience என்ற சொல் கேள்வியை (hearing) அடியாகக் கொண்டு எழுந்தது. அதன் காரணமாக auditorium என்ற சொல்லுக்குக் கேட்போர் கூடம் என்ற சொல்லும் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. நான் இங்கு வழக்கத்திற் பொதுவாகிவிட்ட பார்வையாளர் என்ற சொல்லையே பயன்படுத்த விரும்புகின்றேன். ஐந்து பேரறிவையும் கண்களே கொள்ளக்கூடிய தன்மையினால் பார்வையாளர் என்ற சொல் நாடகத்துக்கு மிகப் பொருத்தமானதாகவும் இருக்கிறது.

எந்தக் கலையும் பார்வையாளருக்காகவே அரங்கேறுகின்றது. நாடக அரங்கும் பார்வையாளரைக் கவருங் கருத்துடையது. சமுதாயத்தில் நாடக அரங்கு மதிப்பார்ந்த இடம் ஒன்றை வகிக்க வேண்டும் என்பதே நாடகத்துறைக் கலைஞர்களது ஏகோபித்த கருத்தாகும். அது பார்வையாளரிலே தங்கியுள்ளது. எத்தகைய பார்வையாளர்? நாடகத்தை நயக்கத் தகுந்த பார்வையாளர்.

**கவிஞர் வி. கந்தவனம்**



நாடகப் பார்வையாளர் தகைமை

நாடகப் பார்வையாளர் என்போர் நாடகத்தை நயக்கத் தெரிந்தவராக இருத்தல் வேண்டும். அப்படி இருப்பதற்குச் சில தகைமைகள் வேண்டும். அவற்றுள் தலையாயது நாடகக் கலை பற்றிய அறிவு. ஒரு விளையாட்டினது, உதாரணமாக உதைபந்தாட்டினது ஆடல் விதிமுறைகளை அறிந்தவர் அதனைப் பார்ப்பதற்கும் அறியாதவர் பார்ப்பதற்கும் நிறையவே வேறுபாடு இருக்கிறது. அறிந்தவர் இரசனைத் திறம் அறிவுபூர்வமானதாக இருக்கும். அறியாதவர் இரசனை மேலோட்டமானது (superficial) ஆகவே இருக்கும். அதாவது கருத்தோடு கலவாத கட்புல இன்பத்தை அனுபவிக்கும் அளவில் அமைந்துவிடும். இது நாடகக் கலைக்கும் பொருந்தும். எல்லாக் கலை நயப்பாடுகளுக்கும் பொருந்தும்.

அடுத்து முக்கியமான தகைமை நாடகத்தைப் பார்க்க வேண்டும் என்னும் ஆர்வம். இவர்கள் நாடகம் எப்பொழுது மேடையிடப்படும் என்று காத்திருப்பவர்கள். சில நிகழ்ச்சிகளுக்குப் பார்வையாளர் ஆளாளாக எழுத்துமூலம் அல்லது வாய்மூலம் அழைக்கப்படுவதுண்டு. உதாரணத்துக்கு பரதநாட்டிய அரங்கேற்றங்களைக் கூறலாம். அவ்விதம் தனிப்பட்ட முறையில் அழைப்பை எதிர்பாராது, ஊடகங்கள் வாயிலாக விடுக்கப்பெறும் பொது அழைப்புக்களை அல்லது துண்டுப் பிரசுரங்களைப் பார்த்த அளவிலேயே நுழைவுச் சீட்டுகளை வாங்கிக்கொண்டு அரங்கத்தை அடைபவர்களே நாடகப் பார்வையாளராகக் கொள்ளத் தகுந்தவர்கள்.

அப்படியென்றால் நிர்ப்பந்தப்படுத்தப்பட்ட நிலையில் முகம்முறிக்கமாட்டாது, நுழைவுச் சீட்டுக்களைப் பெற்றுக்கொண்டு நாடகத்துக்குச் செல்பவர்கள் பார்வையாளர்கள் அல்லரா என்று கேட்கப்படலாம். பார்க்கச் செல்பவர்கள் எல்லோருமே பெயரளவிற் பார்வை யாளர்தாம். மறுப்பதற்கில்லை. ஆயின் தற்காலிக பார்வையாளரின் ஆதரவு தற்காலிக மானதாகவே இருக்கும். நாடகத்தைத் தாகத்துடன் நயக்கச் செல்பவர்களே உண்மையான நாடகப் பார்வையாளர்கள். நாடகம் இன்றும் ஒரு கலையாக வளர்ந்துகொண்டிருக்கிறதென்றால் அதற்கு அதன்மீது இயல்பான நாட்டங் கொண்ட ஆர்வலர்களே காரணமாவர்.

ஆரம்ப நிலையிலிருந்து நெடுங்காலமாக நாடகமே மக்களின் பிரதான பொழுதுபோக்காக இருந்துவந்தது. அதென்ஸ் நகரத்தில் நாடகம் நடந்தால் நகரத்தவர் எல்லா வேலைகளையும் நிறுத்திவிட்டு நாடகத்துக்குச் செல்ல அனுமதிக்கப்பட்ட ஒரு காலம் இருந்தது. இவ்வழக்கத்தை மத்தியகால ஐரோப்பாவின் பிற நகரங்களும் பின்பற்றியதாக வரலாறுகள் கூறுகின்றன.

தற்காலத்தில் நாடகம் பலவகையான மகிழ்வளிப்புகளுடன் போட்டிபோட வேண்டிய நிலையில் உள்ளது. அவற்றுள் தலையாயது திரைப்படம். அடுத்தது தொலைக்காட்சி நாடகங்கள்.

திரைப்படங்கள் வரத்தொடங்கிய காலத்திலே அது நாடகத்தை வீழ்த்தப் போகிறது என்ற அச்சம் நாடகக் கலையுலகத்தில் தலையெடுத்தது. திரைப்படத்தின் வருகையாலும் தொலைக் காட்சியின் ஆட்சியாலும் நாடகம் வெகுவாகவே பாதிக்கப்பட்டுள்ளது என்பது உண்மையே. ஆயினும் அவற்றால் நாடகத்தை முற்றாக முறியடிக்க முடியவில்லை. அதற்குரிய பெருங் காரணம் நாடக நயப்பாளரேயாவர்.



இவர்கள் ஏன் இன்னமும் நாடகத்தைப் பார்ப்பதில் ஆர்வங் காட்டுகிறார்கள்?

*- தொடரும் ...*


தமிழ் மக்களின் நெருங்கிய நண்பர்

**ரவி நடராஜா**



• வாகன விபத்துக்குள்ளாகியவரின் இழப்பீடு பற்றிய தகுந்த ஆலோசனைகள் வழங்கப்படும், உரிய இழப்பீடுகள், மற்றைய இழப்பீடுகள், விபத்துக்குள்ளாகியவரின் சம்பள இழப்பீடுகள் மற்றும் வாகன விதி முறைகளை மீறிய குற்றங்கள் Accident & Traffic Ticket

(14 Years Insurance Claims Experience)

416-245-6555 2095 Weston Road, Suite 203, Toronto, ON

416-755-2801 2390 Eglinton Ave., E. Suite 223, Scarborough, ON

SHAWN TRUCK & FORKLIFT

DRIVING SCHOOL







Fork Lift licence $75.00

Truck licence $899.00

In Classes

365 (Learning Permit)

Dangerous Goods

Border Crossing

Air Brake (Z)

Log book

• A-Z & D-Z up grade • One on One Training

• Job Placement Right Away!

• உடனடி வேலை வாய்ப்புக்கள்

•வாரத்தில் ஏழு நாட்களும் அனுபவம் வாய்ந்த ஆசிரியர்களால் பயிற்சிகள் வழங்கப்படும்.

Air brake $175.00

Excellent Quality - Low Cost Training

சிறந்த பயிற்சி பெற அழையுங்கள்:

Pl. Call: Raja / Shan

416.412.7618 / 416.829.0603

40 NUGGET AVE., #8, Scarborough East (McCowan & Sheppard)

mhc

MOHAN

HOMEOPATHIC CLINIC & MASSAGE CLINIC

• கழுத்து, முதுகு நோவு
• வாகன விபத்து
• மன அழுத்தம்
• விளையாட்டுக் காயங்கள்
• தலையிடி, தலைவருத்தும்

போன்ற நோய்களிற்கு அழையுங்கள் **டாக்டர் ஜே. மோகன்**



Dr. J. Mohan

D.H.M.S., N.H.C.

WE OFFER CONSULTATION
REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:

• STRESS
• SKIN PROBLEM
• RESPIRATORY PROBLEMS
• DIGESTIVE PROBLEMS
• VARICOSE VEINS
• BACK PROBLEM / NECK PROBLEM
• TENNIS ELBOW PROBLEM
• TREAT WITH MASSAGE THERAP
• ALLERGIES
• SEXUAL PROBLEMS
• SEXUAL PROBLEMS
• CHOLESTEROL
• TUMOR
• FOOT PROBLEM

HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING

| | | | |
|---|---|---|---|
| Cough | Tonsillitis | Migraines | Prostatitis |
| Flu | Gout | Hair Loss | Obesity |
| Depression | Arthritis | Diabetes | Hemorrhoids |
| Anxiety | P.M.S | Cystitis | Stumatitis |
| Asthma | Leucorrhea | Cancer | Colitis |

Also other Acute & Chronic Problems
HOMEOPATHIC PRACTITIONER

TEL: 416-298-7537 / 416-291-3022

5200 Finch Ave, East Suite 210
(At Middle Field), Scarborough, M1S 4Z4

# தலித் படும் பாடு - 111

முதலில், அடிப்படையான சில விடயங்களைச் சொல்ல வேண்டும். எனக்கு நினைவு தெரிந்து தமிழ் நாட்டின் நடப்புகளைக் கவனிக்கத் தொடங்கிய காலத்திலிருந்து இன்று வரை நான் படித்தும், பார்த்தும், கேட்டும் அறிந்த வற்றிலிருந்து ஒன்றிரண்டு அடிப்படையான விடயங்களைச் சொல்கிறேன்: ஒன்று, பகுத்தறிவுத் தந்தையென்றும், சமூக சமநீதிப் புரட்சியாளரென்றும், தமிழ் நாட்டில் சாதி ஒழிப்பிற்காகப் போராடிய முதல்வர் என்றும், இன்னும் பலவாறாக நிறைய அவதார மகிமை-கள் ஈ.வே.ரா வை அலங்கரிக்கின்றன. பகுத்தறிவுத் தந்தை, கடவுள் மறுப்பாளர் என்று போற்றப்படும் அவர், அவரது பக்த கோடிகளாலேயே ஒரு குறையும் அற்ற, புனித புருசனாக, எல்லா அவதார குணங்களும் கொண்ட அவதார புருசனாக அவர் கொண்டாடப் படுவது, இதற்கு கொஞ்சமும் எதிரான மாற்றுக்கருத்து எதுவும் எழுந்துவிடாதபடி ஒரு மிரட்டல் சூழல் தமிழ் நாட்டில் இன்று எழுப்பப்பட்டு கட்டிக் காக்கப்படுகிறது.

இதே போன்ற நிலைதான் திராவிட இயக்கங்கள் பற்றியும். பெரியாரும், அண்ணாதுரையும், கருணாதியும், திராவிட இயக்கத்தின் மும்மூர்த்திகள். மற்ற தலைவர்கள் எல்லோரும், வட்ட மாவட்டச் செயலாளர்கள், கவிப் பேரரசுகள், சுப்ரீம் நடிகர்கள் எல்லோரும் முப்பத்து முக்கோடி தேவர்களுக்கு இணையான-வர்கள். இம்மாதிரியான ஒரு புராணப்பார்வையும் மதிப்பீடும் பலமாக வேரூன்றியுள்ளது. திராவிட இயக்கம் பற்றியுமோ, இயக்க மும்மூர்த்திகள், தேவ தேவதைகள் யார் பற்றியுமோ ஒரு நேர்மையும் உண்மையுமான, கட்சிச் சார்பற்ற வரலாறு எழுதப்பட்டதில்லை.

> ”இப்பத்திரிகாலயத்தைத் திறப்பதற்கு (குடியரசு) ஈசன் அருளால் ஸ்ரீ ஸ்வாமிகள் போன்ற பெரியார் கிடைத்தது அரிதேயாகும். இறைவன் அருளாலும் சுவாமிகளது அருளாலும் பத்திரிகை என்றும் நிலைபெற, மற்ற பத்திரிகளிட முள்ள குறையாதுமின்றிச் செவ்வனே நடைபெற வேண்டுமாய் ஆசீர்வதிக்கும்படி சுவாமிகளை வேண்டிக்கொள்கிறேன்”
> ”பெரியார் ஈ.வே.ரா”

இத்தகைய பக்தி உணர்வு, இயக்கத்தைச் சார்ந்தவர்களை மாத்திரம் தான் பீடித்துள்ளது என்பதில்லை. தமிழ் நாட்டு அரசு அதிகாரத்திற்கு அடிபணியும் அடியார்கள் கூட்டமாக மாறியுள்ளது. இதில் யார் எந்த கட்சி என்ற பாகுபாடுகள் கிடையாது. காமராஜ் வாழ்க்கைச் சரிதம் எழுதிய கோபண்ணா என்னும் பழம் காங்கிரஸ் காரருக்கு அப்புத்தகத்தை வெளியிட தகுதி பெற்ற ஒரே தமிழ் தலைவர் கலைஞர் கருணாதிதான் என்று பிரகடனம் செய்து, அவரிடம் தஞ்சம் அடைந்தார் என்றால், காலத்தின் கோலம் என்று தான் சொல்லவேண்டும்.

தன்னிலும் பலபடிகள் உயர்ந்த, தேசிய தளத்தில் இயங்கிய ஒரு தலைவரை, காமராஜை, அண்டங்காக்கை என்றும், ஸ்விஸ் பாங்கில் பணம் சேமித்து வைத்திருப்பவர் என்றும் திட்டமிட்ட பொய்ப்பிரசாரம் செய்த கருணாதி தான் இன்று, காமராஜ் வாழ்க்கை பற்றி தான் எழுதிய புத்தகத்தை வெளியிடும் தகுதி பெற்ற ஒரே தலைவர் என்று சொல்கிறார் ஒரு பழம் காங்கிரஸ் காரர் என்றால், இங்கு யாரைப் பற்றி என்ன சுதந்திரமான கருத்துப் பரிமாற்றம் சாத்தியம்? இது காமராஜ் போன்ற ஒரு தலை-வரின் நினைவை படு மோசமாக அவமானப்படுத்திய காரியம், தன்னையும், ஒரு அரிய தலைவரான காமராஜையும், புகழ்பெற்ற ஒரு நூற்றாண்டுக்கும் மேல் நீண்ட வரலாறு கொண்ட காங்கிரஸ் கட்சியையும் கேவலப் படுத்தும் செயல் இது என்று கோபண்ணாவுக்கும் தெரிய வில்லை.

காங்கிரஸ் கட்சியிலோ, அல்லது எந்த சுரணை உள்ள பத்திரிகையுமோ இந்தக் கலாச்சாரச் சீரழிவைப்பற்றி ஒரு வார்த்தை சொல்லவில்லை. பயங்கர மௌனம். கருணாதி சிரித்த முகத்துடன் புத்தகத்தை வெளியிட, காங்கிரஸ் தலைவர்கள் இருபக்கமும் அணிவகுத்து நிற்கும் புகைப் படத்தை வெளியிட்டு மகிழ்ந்தன. இது தமிழ் நாடு! இவர்கள் தலை குனிவது வெட்க உணர்வு மேலிட்டு அல்ல. அதிகாரத்திற்குத் தான்.


தனக்கு விவரம் தெரிந்த காலத்திலிருந்து கடவுள் நம்பிக்கை கொண்டிருந்ததில்லை என்று பகுத்தறிவுத் தந்தையே வாக்கு மூலம் கொடுத்துள்ளார். உண்மை இதற்கு மாறாக இருக்குமானாலும், அதற்கான சான்றுகளை ஈ.வே.ரா வின் எழுத்துக்களிலிருந்தே எடுத்து முன்வைத்தபோதிலும், அதை எதிர்கொள்ளும் மனம் பெரியார் பக்த கோடிகளுக்கு இருப்பதில்லை. அதைச் சான்றுகளோடு மறுக்க மாட்டார்கள். மாறாக, இதை அவதூறுப் பிரச்சாரம் என்றே கூச்சலிட்டு எதிராளி வாயை அடைக்கும் முயற்சி நடக்கும். வைக்கப்பட்ட சான்று அத்தோடு மறக்கப்பட்டு விடும். உண்மை என்னவென்றால், காங்கிரசிலிருந்து கோபத்துடன் வெளியேறி குடியரசு பத்திரிகை தொடங்கிய போது, அப்போது அவருக்கு வயது நாற்பத்தாறு. -ஈ.வே.ரா விடம் நாத்திகமும் கிடையாது. சாதி ஒழிப்பு பற்றிய சிந்தனையும் ஏதும் இருந்ததில்லை. சாதி ஒழிப்பு என்ற போர்வையில் தன் ஜீவனின் கடைசி நாள் வரை முழுமூச்சாகப் பிரசாரம் செய்த பார்ப்பன துவேசமும் அன்று பிறப்பெடுக்கவில்லை.

அதற்கான ஆவண சாட்சியங்கள்:

காங்கிரசை விட்டு விலக இருந்த நாட்களில், தன் புதிய அரசியல் வாழ்க்கையின் அடையா-ளமாக அவர் தொடங்கிய குடியரசு பத்திரி-கயின் வெளியீட்டு விழா - நான் எழுதுவதை கவனமாகப் படிக்கவேண்டும், பத்திரிகை திறப்பு விழா திருப்பாதிரிப்புலியூர் ஞானியார் மடம் ஸ்ரீலஸ்ரீ சிவசண்முக மெஞ்ஞான சிவாச்சாரி சுவாமிகள் ஆசியுடன் நடந்தது. ஆசி பெற்ற, நாத்திகராகவே பிறந்ததாக இப்போது சொல்லிக் கொள்ளும், சொல்லப்படும் ஈ.வே.ரா எழுதுகிறார்:

”இப்பத்திரிகாலயத்தைத் திறப்பதற்கு ஈசன் அருளால் ஸ்ரீ ஸ்வாமிகள் போன்ற பெரியார் கிடைத்தது அரிதேயாகும். இறைவன் அருளாலும் சுவாமிகளது அருளாலும் பத்திரிகை என்றும் நிலைபெற, மற்ற பத்திரிககளிடமுள்ள குறையாது மின்றிச் செவ்வனே நடைபெற வேண்டுமாய் ஆசீர்வதிக்கும்படி சுவாமிகளை வேண்டிக கொள்கிறேன்.” இது நடந்தது 1925-ல். பெரியாருக்கு அப்போது வயது 46.

ஈ.வே.ரா வின் 90வது ஆண்டு மலரில் தன்னைப் பற்றி இவ்வாறு கூறிக்கொள்கிறார்: ”நான் 1920-ல் காங்கிரசில் சேர்ந்தேன். அதற்கு முன்பு 1900 முதல் பார்ப்பனரல்லாதார் நல உணர்ச்சி கொண்டவனாக இருந்தேன். நான் 1900-க்கு முன்பே, கடவுள், ஜாதி மத விடயங்களில் நம்பிக்கை இல்லாதவனாக இருந்து வந்தேன்.”



அடுத்து அரச உத்தியோகங்களிலும் சமூகத்தி லும் பார்ப்பனர் பெற்றுள்ள அந்தஸ்தையும் உத்தியோகங்களையும் பார்த்துப் பொறாமை கொண்டு அவற்றையும் அவர்களுக்கு அடுத்த படியில் சமூகத்தில் அந்தஸ்து பெற்றுள்ள தமது சாதியனருக்காக்கிக் கொள்ளவே, தென்னிந்திய நல உரிமைச் சங்கம் என்று ஒரு மெத்தப் பெரிய இலட்சிய பெயருடன் தொடங்கிய நீதிக் கட்சித் தலைவர் சேர். பிட்டி தியாகராஜ செட்டியார் இறந்த போது, ஈ.வே.ரா எழுதிய இரங்கல் செய்தி:

## வெங்கட் சாமிநாதன்

”என்னே மனிதர் தம் வாழ்நாளின் நிலை. அரசி யல் உலகில் எனக்கும் அப்பெரியாருக்கும் உள்ள வேற்றுமை வடதுருவம் தென் துருவம் எனின் குன்றக் கூறுதலேயாகும். நமது தமிழ்நாட்டுத் தவப் பேற்றின் குறைவினால் பார்ப்பனரல்லாதார் கூட்டம் ஒன்று கண்டார். அத்தகைய கூட்டம் ஒன்று காணாது காங்கிரஸ் வழி நின்று தேசத் தொண்டாற்ற வந்திருப் பாராயின் நமது நாட்டின் நிலைமை இன்று வேறுவிதமாகத் தோன்றும் என்பது என் கொள்கை.” இதுவும் 1925 ஈ.வே.ரா தான் . அவருக்கு வயது 46. இதற்கு மேலும் நிறைய மேற்கோள்கள் வேண்டுபவர்கள் ம.வெங்கடேசன் எழுதியுள்ள ஈ.வே.ராமசாமி நாயக்கரின் மறுபக்கம் என்ற நூலைப் பார்க்கவும். அவற்றில் விண்ணு லகம், ஆன்மா, ஆவி, ஆண்டவன் செயல், இறைவன் திருவடி எய்துதல் பற்றியெல்லாம் பகுத்தறிவுத் தந்தை பெரியார் நிறைய எழுதியுள்ளதைப் படித்து மகிழலாம்.

இதற்கு அடுத்த சில மாதங்களில் அவரது காங்கிரஸ் விலகலும், சாதி ஒழிப்பு என்று பெயர் பெற இருந்த பார்ப்பன துவேச பிரச்சாரமும், குடியரசு பத்திரிகையின் தலைப்பில் அன்று வரை இருந்த பாரதியார் பாடல் வரிகளும் நீக்கம், எல்லாம் நடந்தேறின. பாரதியார் பாடல் வரிகள் நீக்கப்பட்ட காரணம், அதை எழுதிய பாரதி பார்ப்பானாகப் பிறந்து தொலைத்த காரணம் தான்.

ஈ.வே.ராவுக்கு சாதி ஒழிப்பு பற்றிய பிரக்ஞை பிறக்கும் 20 வருடங்கள் முன்னேயே ”சாதிகள் இல்லையடி பாப்பா” என்று முழங்கியவன் பார்ப்பானாயிற்றே, அவன் துவேசிக்கப்பட வேண்டியவன் - இவை தான் தனது 46 வது வயதில் புதிய அவதாரம் எடுத்த பகுத்தறிவுத் தந்தை பெரியாரின் ஆரம்பங்கள். இதன் பிறகு அவரது அரசியல், சமூகப் பார்வைகள் நடவடிக்கைகள் எல்லாம் இந்த ஒரே அஸ்த வாரத்தில் எழுப்பப்பட்டவை தான். அது பார்ப்பன துவேசம். இந்த அடிப்படைப் பார்வையில் தான் அவருடைய எந்த செயலும் பேச்சும் எழுத்தும் புரிந்து கொள்ளப்படும். முரண் பட்டதாகத் தோன்றும் அவரது எந்த பேச்சும் செயலும், இந்த அடிப்படையில் பார்த்தால் முரண் நீங்கி விடும்.

மிக முக்கியமாக அவரது ஜாதி ஒழிப்புப் பிரசாரமே, ஜாதியை ஒழிக்கப் பிறந்த பிரசார மல்ல. அவரது பார்ப்பன துவேசம் தான் ஜாதி ஒழிப்பு என்று பெயர் பெற்றது. அவர் 1925 வரை தன்னை ஈ.வே.ராமசாமி நாயக்கர் என்று தான் அடையாளப்படுத்திக் கொண்டார். கையெழுத் திட்டார். அவர் 1925லிருந்து வெறுக்க ஆரம்பித்த பாரதி, தான் வெளிஉலகுக்கு தன் பாட்டுக் களாலும் எழுத்துக்களாலும் தெரியப்படுத்தத் தொடங்கிய காலத்திலிருந்து தன்னை என்றும் சுப்பிரமணிய அய்யர் என்று சொல்லிக்கொண்டது கிடையாது. ஈ.வே.ரா தன் அவதார மகிமையை உணர ஆரம்பித்த 1925க்கு பல பத்து வருடங்களுக்கு முன்பே சாதியை எதிர்த்துப் பேசத் தொடங்கிவிட்ட பாரதி,



தொடர்ச்சி 12ம் பக்கம்


WEB CREATION


**அதிக செலவில்லாமல் சிறப்பான இணைய தளத்தை உங்கள் வியாபாரத்துக்கு என அமைக்க வேண்டுமா? இலவச ஆலோசனை பெற இன்றே, இப்போதே அழையுங்கள்** M. Karthik

தொலைபேசி எண் - 647 519 0623



YARL WINDOW

BLINDS & DRAPERY



BLINDS DRAPERIES AND SHUTTERS

- Venetian Blinds
- Pleated Shades
- Vertical Blinds
- Cellular Shades
- Roller Shades

FREE ESTIMATE




உங்கள் எண்ணம் போல் வண்ண, வண்ணத் திரைச் சேலைகளுக்கு இன்றே அழையுங்கள்

விபரங்களுக்கு: என். செல்வம் - 905.201.7733
416.806.5397

5210 Finch Ave., E. Unit #3 (Middlefield & Finch) Scarborough, ON

*The Mortgage Alliance company of Canada*



**வீடு வாங்குவது நீங்கள்**
**பணம் ஒழுங்கு செய்வது நான்**

*உங்கள் இல்லத்தை 5% முற்பணத்துடன் கொள்வனவு செய்வதற்கு வங்கி வட்டி வீதத்தைவிட குறைவாக வீடு மற்றும் வியாபார 1ஆவது, 2ஆவது, 3ஆவது அடமான கடன் பெற நாடுங்கள் - காந்தன்*



Tel.: 416.291.3997
Cell: 416.895.4283

குறைந்தவட்டி நிறைந்த பலன்

# யோகா சோதிடம்

- கிரகப் பொருத்தம் பார்த்தல்
- சுபமுகூர்த்தம் கணித்தல்
- பலன் பார்த்தல்
- சாதகக் குறிப்புக் கணித்தல்

416-299-8361

மேலைத் தேசத்தில்

கீழைத் தேசத்து வாசனைகள்...

# Niru BRAND ®

## எமது புதிய அறிமுகங்கள்




Niru Niru

Improted & Marketed By:

**NIRU ENTERPRISES INC.**
40 Minuk Acres Scarborough.
Ontario. Canada, M1E 4Y6
Tel: 416-750-1976
Fax: 416-750-8779
www.niru.com

**NIRU(EUROPE) LTD.**
Unit 11, Mitcham Insustrial Estate,
85, Streatham Road, Mitcham
Surrey, CR4 2AP. U.K
Tel: +44 208 640 8228
Fax: +44 208 640 8312

# காப்புறுதி நட்டஈட்டு நிவாரண கொடுப்பனவு

**காப்புறுதி நட்டஈட்டு நிவாரண கொடுப்பனவுகளில் காப்புறுதி கம்பனியுடன் "முரண்பாடுகள்" அல்லது ஏதாவது வழியில் "திருப்பியின்மை" என ஏதாவது ஏற்பட்டால் அதனை எவ்வாறு அணுகி தீர்த்துக் கொள்வது?**

இந் நட்டஈடுகள், கொடுப்பனவுகளில் ஏற்படும் முரண்பாடுகள் என்பது பல நிலைப்பாடுகளில் உருவாகி நட்டஈட்டினை பெற்று கொள்பவரை அதிதிருப்திக்கு உள்ளாக்கும் - காப்புறுதி நட்டஈடுகளில் ஏற்படும் அதிருப்திகளை பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

1. வாகன காப்புறுதிகளில் இழப்பீட்டு நிவாரணங்கள், வீடுகள் சொத்துகளில் ஏற்படும் பாதிப்புகளில் நட்டஈடுகள் போன்றவற்றினை வழங்க தவறியது அல்லது காலதாமதமாக வழங்கியது அல்லது வழங்கியதில் ஏற்பட்ட நட்டஈட்டு தொகைகளின் பற்றாக்குறைகள்.
2. ஆயுள் காப்புறுதிகளிலும், மருத்துவ காப்புறுதிகளிலும் நட்டஈடுகள் வழங்குவதில் உள்ள மறுப்புகளும், முரண்பாடுகளும்

முதலில் குறிப்பிடப்பட்ட நட்டஈட்டு காப்புறுதி ஒப்பந்தங்களில் உள்ள சட்ட விதிகள், மற்றும் குறிப்பிடப்பட்ட தொகை நிவாரணத்தினை பெற்றுக்கொள்ளும் உடன்படிக்கை, எவ்வளவு காலங்களுக்குள் இவற்றினை பெற்றுக்கொள்ள வேண்டும் போன்ற விதிகள் யாவும் ஒவ்வொரு உடன்படிக்கையிலும் தெட்டத் தெளிவாக குறிப்பிடப்பட்டிருக்கும். இதனை பூரணமாக தெளிவுபடுத்தி புரிந்து கொள்வதுடன், அது தொடர்பாக காப்புறுதி கம்பனியின் பத்திரத்தில் தவறுகள், முரண்பாடுகள் உள்ளது என்பது நியாயமாக தெரிந்தால் அதனை சுட்டி காட்டி இதில் உள்ள நியாயம் எது என்பதனை காப்புறுதி கம்பனியின் நட்ட ஈடு வழங்கும் பிரிவுடன் பேசி தீர்த்து கொள்ளலாம்.

சாதாரணமாக பேசி தீர்வு காண முடியாவிட்டால் நட்டஈடு வழங்கும் பிரிவின் அதி உயர் தலைமை அதிகாரிக்கு (Chief Executive officer in Claims Department) நேரடியாக முறைப்பாடு செய்வதன் மூலம் முரண்பாட்டினை சற்று மேல் மட்டத்திற்கு எடுத்து செல்லலாம். அங்கும் தங்களுக்கு தீர்வு திருப்தியாக கிடைத்திராவிட்டால் ஒவ்வொரு கம்பனியிலும் இருக்கும் வாடிக்கையாளர் முறைப்பாட்டு விசாரணை மன்றத்திற்கு பிரச்சினையினை முன் எடுக்கலாம். இப்பிரிவினை ஆங்கிலத்தில் "Ombudsperson" என குறிப்பிடப்படுவது உண்டு.
அதாவது வாடிக்கையாளர்களின் முறைப்பாடு


**சிவ. பஞ்சலிங்கம் B. Com,**

(Licensed Insurance Broker)

காப்புறுதி சம்பந்தமான ஆலோசனைகளுக்கு:

**416.321.0999**


களையும், அதிருப்தியினையும் விசாரித்து நீதி வழங்க என இருக்கும் ஒரு கம்பனியின் சட்ட பூர்வமான நீதிபதி என குறிப்பிடலாம். இச்சிறு நீதிமன்ற பிரிவு கனடாவின் சகல காப்புறுதி கம்பனிகள், வங்கிகள் போன்றவற்றில் கனடாவின் நிதியியல் கம்பனி சட்ட விதிப்படி உருவாக்கப்பட்டு கம்பனிக்குள் இயங்கிக் கொண்டே உள்ளது. இவர்கள் சரியான நியாயமான தீர்வினை வழங்கியே தீர்வார்கள்.

சரி! இங்கு கம்பனிக்குள் உள்ள 'ஓம்வுட்ஸ் பேர்சன்" என்னும் சிறு நீதிமன்ற பிரிவினால் தங்களுக்கு நியாயம் கிடைக்கவில்லையானால் பிரச்சினையினை முன் எடுத்து செல்ல வேண்டிய இடமே. "Insurance Bureau of Canada" என்னும் காப்புறுதி கம்பனிகளை நெறிபடுத்தும் நிறுவனத்தின் "வாடிக்கையாளர் வழிகாட்டல் பிரிவு" (Consumer Assistant Centers) என்னும் அரச நிறுவனம் ஆகும்.

இந் நிறுவனத்திற்கு காப்புறுதி கம்பனியின் தீர்மானங்களில் ஆதிக்கம் செலுத்தும் அதிகாரம் முழுமையாக இல்லாதிருப்பினும், பாதிக்கப்பட்ட வாடிக்கையாளருக்கு சரியான முறையில் தீர்வு காண்பதற்கு வழிகாட்டுவார்கள். இவ் அரச முறைப்பாட்டு நிறுவனத்தின் தொலைபேசி இலக்கம் பின்வருமாறு - The Centre for the financial services ombuds net work (CFSON) 1-866-538-3766. ரொறொன்ரோவில் இருப்பவர்களாக இருந்தால் 416-777-2043 என்னும் தொலைபேசி இலக்கத்திற்கும் அறிவிப்பதுடன் இது தொடர்பான தகவல்களை மின் கணினி மையத்தில் பெற பின்வரும் இணையத்தளத்திற்கு சென்று தகவல்களை பெறலாம். www.cfson.crcsf.ca

குறிப்பிடப்பட்ட கம்பனிகளில் முதலில் முறைப்பாடு செய்ய ஆரம்பிப்பவர்கள் தத்தமது கம்பனியுடன் தொடர்பு கொண்டே தமது கம்பனி முறைப்பாட்டு பிரிவின் தொலைபேசி இலக்கம், விலாசங்களை பெற்று கொள்ளலாம். பொருட்கள், சொத்துகளில் ஏற்படும் இழப்புகளுக்கு நட்டஈடுகள் பெறுவதில் காப்புறுதி கம்பனிகளுடன் முரண்பாடுகள் ஏற்பட்டால் அதனை தீர்ப்பதற்கு என அரசு அனுமதி (License) பெற்ற "Public insurance adjuster" என்னும் பெயரில் இம் முரண்பாடுகளை தீர்ப்பதற்கு என அனுபவம் உள்ள தொழில் துறையினரை அணுகுவதன் மூலம் ஓர் ஊதியத்தின் அடிப்படையில் காப்புறுதி கம்பனிகளுக்கும், வாடிக்கையாளர்களுக்கும் இடையில் உள்ள முரண்பாடுகளை தீர்த்து வைப்பார்கள். இவர்கள் தொடர்பான விவரங்களை தொலைபேசி புத்தகங்களிலும், மின் கணினி தொடர்மையத்தில் இருந்தும் பெற்று கொள்ளலாம்.

இங்கும் திருப்தி இல்லையாயின் இறுதியாக அணுக வேண்டியவரே காப்புறுதி துறையில் நிபுணத்துவம் பெற்ற சட்டத்தரணி ஆவார். பாதிக்கப்பட்டவர் பக்கத்தில் நியாயம் பெற ஏதாவது வழி இருந்தால் உறுதியாக நியாயம் கிடைத்தே தீரும்.

ஆனால் இங்கு பொதுவாக பிரச்சினை ஏற்படுவது எப்படியென்றால் காப்புறுதியினை பெற்று கொள்பவர், அவ் ஒப்பந்தம் தொடர்பாக பூரணமாக புரிந்து கொள்ள தவறியதே ஆகும். வாடிக்கையாளர் புரிந்து கொள்ள தவறுவது என்பதுடன், காப்புறுதி ஒப்பந்தத்தினை வழங்கும் கம்பனியின் முகவரும் சில நேரங்களில் இவ் ஒப்பந்தத்தில் உள்ள நட்டஈடு பிரிவுகள், வழங்கப்படும் நட்டஈட்டு தொகைகள் பற்றி தெளிவு பண்ணவும் தவறியிருக்கலாம். இத்தகைய தவறினை மேற்கொண்ட முகவருக்கு எதிராகவும் வக்கீலின் உதவியிடன் சட்ட மனு தாக்கல் செய்து நிவாரணத்தினை பெற்று கொள்ளும் வாய்ப்புக்கள் இருப்பதுடன், கனடாவின் காப்புறுதி சட்ட வரலாறுகளில் இத்தகைய வழிகளில் தீர்வுகள் காணப்பட்ட சம்பவங்கள் ஏராளம் ஆகும்.

ஏனெனில் ஒவ்வொரு அனுமதிப்பத்திரம் பெற்ற முகவர்கள், தொழில் துறை சார்ந்தவர்களும், இத்தகைய தவறுகளினால் ஏற்பட போகும் வாடிக்கையாளர்களின் பாதிப்புகளுக்கு நிவாரணம் வழங்க தயாராக 'தவறுகளுக்கான பொறுப்பு காப்புறுதி' (Errors & Omission liability insurance courage) என ஓர் ஒப்பந்தம் வைத்திருக்க வேண்டியதும் கண்டிப்பானதாகும். இவ் காப்புறுதி பிரிவின் ஒப்பந்தமே முகவர் ஒருவர் வாடிக்கையாளரை நோக்கி செய்யும் தவறுக்கு நட்டஈடு வழங்க உள்ள ஒப்பந்தம் ஆகும்.




**SRI PARADISE Catering & Take -out**

**416.269.4509**

292 Markham Road, Scarborough, ON



| திங்கள் - செவ்வாய் சிங்கப்பூர் நூடில்ஸ் (கோழி மரக்கறிகளுடன்) | புதன் - வியாழன் கொத்துரொட்டி ஆடு மாடு கோழி | வெள்ளி மரக்கறிச்சாப்பாடு 5 மரக்கறி, சலாட், பப்படம், ரசம், மிளகாய்ப்பொரியல், அச்சாறு, பாயாசம், வடை | Daily special மரக்கறிச்சாப்பாடு 3 மரக்கறி சலாட், பப்படம் ரசம், மிளகாய்ப்பொரியல், அச்சாறு | Dinner Special சிங்கப்பூர் நூடில்ஸ் கோழி மரக்கறிகளுடன் | சனி - ஞாயிறு Lunch Special வாழையிலைச் சாப்பாடு கோழி, ஆடு, மாடு, இறால், நண்டு, மீன், முட்டை, கருவாடு, அச்சாறு, கட்டைச் சம்பல், மீன் பொரியல், கட்லட், உருளைக் கிழங்கு, நெத்தலி பிரட்டல், கத்தரிக்காய் பிரட்டல் |
|---|---|---|---|---|---|
| $2.99 | $2.99 | $4.50 | $2.99 | $2.99 | $5.99 |



| பரடைசின் Special புரியாணி, தண்டூரி சிக்கன், இஞ்சிச் சம்பல், salad | Dinner Special மசாலா தோசை, சாம்பாறு, சம்பல் | Daily Special பரடைசின் Special புரியாணி சிக்கன்கறி சலாட் முட்டை |
|---|---|---|
| $2.99 | $1.99 | $2.99 |

***Sri Paradiase Specials***

- 10LB அவித்த கோதுமை மா - $3.99
- ரொட்டி .50¢
- விசேட வைபவங்களுக்குத் தேவையான 6 வகையான Combo package. 20 பேர் கொண்ட சபைக்கு $99 மட்டுமே.
- மாதத்திற்குரிய சாப்பாடு - 1 நேரச் சாப்பாடு 1 மாதத்திற்கு - $99.00
  2 நேரச் சாப்பாடு 1 மாதத்திற்கு - $150.00

சமையலில் அனுபவம் உள்ளவர்கள் வேலைக்குத் தேவை. தொடர்பு கொள்ளவும்

25 மேல் கொள்வனவு செய்வோருக்கு 10LB அவித்த மா இலவசம்

# தலித் படும் பாடு.........

09ஆம் பக்கத் தொடர்ச்சி

துவேசக்கப்பட வேண்டிய பார்ப்பான். இது தான் தொடக்கம். பெரிய பெரிய இலட்சியக் கோசங்கள் மறைக்கும் தரமற்ற வெளிப்படையாக சொல்லிக்கொள்ள வெட்கம் தரும் நடைமுறைகள்.

திராவிட இயக்கங்களின் நதி மூலத்தோற்ற வருடமாகிய 1916இருந்து (தென்னிந்திய நல உரிமைச் சங்கம், நீதிக் கட்சி என்றுதான் அவர்கள் தம் வரலாற்றைத் தொடங்குகிறார்கள்) இன்று வரை கோசிக்கப்படும் இலட்சியங் களுக்குப் பின்னிருப்பவை எல்லாம் மிக கடைத்தரமான நடைமுறைகள், வெளியில் சொல்லிக்கொள்ள முடியாத எண்ணங்கள். தமிழ்ப்பற்று, திராவிட நாடு, வடவர் ஆதிக்கம், ஆரியமாயை, ஹிந்தி ஒழிப்பு, சுய மரியாதை, மாநில சுயாட்சி, இனப்பற்று, சமூக சம நீதி, இப்படியான ஒவ்வொரு கோசத்திற்கும் பின்னிருக்கும் சொல்லப்படாத திட்டம் நம் மரியாதைக்கு உரியதல்லாத வேறொன்றாக இருக்கும். மொழியை இவ்வாறு கொச்சைப்படுத்தி அர்த்தமிழக்கச் செய்யத் தொடங்கியது, ஹிட்லரா, ஸ்டாலினா, யார் முதல் ஆசான் என்பதை இப்போது என்னால் சட்டென சொல்லத் தெரியவில்லை. ஒரு சின்னக் குழுவினரின் யதேச் சாதிகார அரசுக்குப் பெயர், peoples' democratic republic. அரசின் ஏக போக முதலாளித்துவத்திற்குப் பெயர் சோசலிஸம். காஸ்சேம்பரில் அடைத்துக் கொலை செய்யப்படக் காத்திருக்கும் இலட்சக்கணக் கானவர்களை சிறை வைத்திருக்கும் முகாமிற்குப் பெயர் சீர்திருத்த முகாம் என்று ஜெர்மனில் பெயர் பெறும் concentration camps. நாஜிக்களின் விரிவாக்கம் national socialists. சோசலிஸமும், யதார்த்தமும், இலக்கியமும் இல்லாத கட்சிப் பிரசார எழுத்துக்குப் பெயர், சோசலிஸ் யதார்த்த இலக்கியம்.

ஈ.வே.ரா.வின் சாதி எதிர்ப்பு என்றுமே பார்ப்பன துவேசத்தோடுதான் ஆரம்பிப்பதும் முடிவதும் ஆகும். தம்மை "நாங்களும் அய்யருங்க மாதிரிதானுங்க" என்று இன்று வரை விடாது தம் சாதிப்பெருமையை சொல்லிக் கொள்ளும் முதலியார்கள், சைவ வேளாளப் பிள்ளைமார்கள் வெகு ஆக்கிரோசத்துடன் பற்றியிருக்கும் சாதி உணர்வுகளைப் பற்றி அவர் என்றும் ஒரு வார்த்தை கண்டித்துச் சொன்னது கிடையாது. நாடு விடுதலை பெற்ற 1947லிருந்து இன்று வரை நடந்துள்ள நூற்றுக்கணக்கான வகுப்புக் கலவரங்கள், வன்னியருக்கும் தாழ்த்தப் பட்டோருக்கும் இடையே, தேவர்களுக்கும், கள்ளர்களுக்கும், நாடார்களுக்கும், தாழ்த்தப் பட்டோருக்கும் இடையே தொடர்ந்து வரும் தீண்டாமை, கலவரங்கள், கொலைகள், தீ வைப்புகள், நில அபகரிப்புக்கள் எது பற்றியும், பெரியாரோ, திராவிட கழகங்களோ ஒரு வார்த்தை, அதை சாதிக்கலவரமாக, தாழ்த்தப்பட்டோருக்கு எதிரான உயர் ஜாதி இந்து வகுப்பினரின் வன்முறை என்று கண்டித்தது கிடையாது, ஏதும் நடவடிக்கை எடுத்தது கிடையாது. கேட்டால் இவற்றிற்கும் பார்ப்பனீயம் என்று பெயர் சூட்டி வசை பாட ஆரம்பிப்பார்கள். கவுண்டர்களின், நாயக்கர்களின், வன்னியர்களின் சாதி வெறி கவுண்டனீயம், நாயக்கரீயம், வன்னீயரீயம் ஆகாது. அதுவும் பார்ப்பனீயம் தான். கவுண்டர்களின் சாதி வெறியில் பார்ப்பான் எங்கிருந்து வந்து இடைபுகுந்தான்?

(தொடரும்)

# சோயாபீன்ஸ் சாப்பிடுங்கள்



சோயா மாவு கலந்த ஆட்டாவில்தான் அதிக அளவு புரோட்டீன் உள்ளதாக அமெரிக்க உணவுத்துறை ஆராய்ச்சி நிபுணராக டாக்டர் சூசன் பட்டர் மும்பையில் நடைபெற்ற கருத்தரங்கில் கூறியுள்ளார்.

அந்தக் கருத்தரங்கில் அவர் பேசும் போது ஒவ்வொரு மனிதனும் ஒரு நாளைக்கு 25கிராம் சோயா உணவைச் சேர்த்துக் கொள்ள வேண்டும். ஏனென்றால், சோயா இரத்தத்தில் கொழுப்பைக் குறைக்கின்றது. இதயம் சம்பந்தப்பட்ட நோய்களைத் தடுக்கின்றது.

இரத்தக் குழாய்களின் விரிவடையும் தன்மையை அதிகப்படுத்துகின்றது. இதனால் இரத்த ஓட்டம் உடலில் சீராகப் பரவ, பாய்ந்திட சோயா உணவு உதவுகின்றது. சோயாவில் புரதச்சத்து மண்டிக் கிடக்கின்றது. பெண்களுக்கு வீட்டு விலக்கு முழுமையாக நிற்கும் நேரத்தில் ஏற்படும் எலும்பு பலவீனங்களையும், மார்பக புற்றுநோயையும் சோயா உணவு தடுக்கின்றது. சோயாவை அதிகம் உண்பதன் மூலம் மாரடைப்பையும், புற்று நோயையும் தடுக்க முடியும். இந்த சோயா உணவைப் பற்றி மருத்துவ குணங்களை பல்வேறு நாடுகள் ஆராய்ச்சி செய்து வருகின்றன. சோயா சைவ உணவு உண் பவர்களுக்கு கிடைத்த ஒரு பெரும் பேறு ஆகும். சோயா உணவில் ஐசோ ஃபிளோவினால் என்ற பொருள் இருப்பதாக மருத்துவ ஆய்வாளர்கள் கண்டறிந்துள்ளார்கள்.

மார்பக புற்றுநோய், ப்ராஸ்டேட் கான்சர், கோலன் கான்சர் போன்றவற்றுக்கு எதிராக, சோயாவில் உள்ள 'ஐசோ ஃபிளோவின்பொருள் செயல்படுகின்றது. இந்த பொருள் சோயாவில் மட்டும்தான் இருக்கிறது. சோயாவிலுள்ள ஒரு வகை இரசாயனப் பொருள் "பைஃபிடோ பாக்டீரியா" என்ற ஒரு வகை பாக்டீரியாவின் வளர்ச்சிக்கு ஊக்கமளிக்கின்றது. இந்த பாக்டீரியா வளர்ச்சி, கோலன் கான்சர் நோய் வளர்ச்சியைத் தடுக்கின்றது. LDL, HDL என்பவை ஒருவகை கொலஸ்ரோல்களாகும். மாரடைப்பு, இதயநோய் போன்றவற்றுக்கு காரணமாக, பொதுவாக சொல்லப்படுவது கொழுப்பு பொருட் கள் என்றாலும், அதில் LDL கொலஸ்ரோல் என்பது தீமை விளைவிக்கும் கொலஸ்ரோல் ஆகும்.

HDL என்பது நன்மை விளைவிக்கும் கொலஸ்ரோல் ஆகும். சோயா உணவினால் இரத்தத்தில் உள்ள LDL கொலஸ்ரோல் அளவு குறைக்கப்பட்டு HDL கொலஸ்ரோல் அளவு அதிகரிக்கப்படுகிறது. சோயா இதய நோயை தடுக்கும் ஆற்றல் உடைய மாமருந்தாக செயல்படுகின்றது. முட்டை, இறைச்சி, மீன் போன்ற விலங்கினங்களில் உள்ள புரதங்களை விட, சோயாவின் தாவர புரத உணவுகளை உண்பது நல்லது. அது இதயம் தொடர்பான நோய் உருவாகும் வாய்ப்பை 25 இலிருந்து 30 சதவீதம் வரை குறைத்து விடுகின்றது.

நாம் உண்ணும் உணவில் தினந்தோறும் 25 கிராம் அளவு சோயா புரதத்தைச் சேர்த்துக் கொள்வது இதயம் தொடர்பான நோய்கள் உண்டாவதை குறைத்து விடுகின்றது என்று அமெரிக்காவின் Food and Administration என்கிற FDA சான்று அளித்திருக்கின்றது.

# சின்னச் சின்ன சங்கதிகள்

இந்த அண்டம் எவ்வாறு உருவானது, பூமியில் உயிரினம் எவ்வாறு தோன்ற ஆரம்பித்தது, பூமியைப்போல் உயிரினம் நிறைந்த கோள் ஏதும் உண்டா என்கின்ற கேள்விகளுக்கான பதில்கள் தேடிப் பலவாறான ஆய்வுகளும் அதற்கான முயற்சிகளும் விஞ்ஞானிகள் சமூகத்தால் நாளாந்தம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவ்வாறானதொரு முயற்சியாக அமெரிக்க நாசா விண்வெளி ஆய்வு மையம் பூமியருகில் தென்பட்ட ரெம்பெல்-1 எனும் பெயரிடப்பட்ட தூமகேதுவை(வால் நட்சத்திரத்தை) இம்பெக்ரர் எனும் விண்கலத்தால் மோதி அதிலிருந்து வெளிப் படும் துகல் கள் வாயுக்கள் என்பவற்றி லிருந்து ஆராச்சிக் கான தகவல்களைப் பெறுவதற்கு முயன்றது. இதன்படி ரெம்பெல்-1 வால்நட்சத்திரம் தாக்கப்பட்டு தகவல்கள் சேகரிக்கப்பட்டன. இந்தத்தாக்குதல் நடந்தேறு வதை சிலி நாட்டில் அமைக்கப்பட்டுள்ள மிகப் பெரிய தொலைநோக்கிக் கமரா மூலம் படம்பிடித்தும் கொண்டுள்ளனர். இந்தத் தாக்குதலால் இந்த வால் நட்சத்திரத்தில் இருந்து வாயுக்களும் துகல்களும் வெகு வேகமாக வெளியேறியதையும் உதைபந்தாட்ட மைதானம் அளவுக்கு குழி ஏற்பட்டுள்ளதையும் தெளிவாகப் படம் பிடித்திருக்கிறார்கள். இந்த ஆய்வின் பெறுபேறுகள் அறிவிக்கப்பட இன்னும் சில மாதங்கள் ஆகலாம் என நாசா தெரிவித்துள்ளது.



தமிழ்நாட்டின் மாமல்லபுரத்தில் புலிக்ககை எனும் ஊரிலுள்ள கோவிலில் இருக்கும் கல்வெட்டில் இந்தப் பகுதியில் இன்னொரு கோவில் இருப்பதாகக் கூறியிருந்ததை அடிப்டையாக வைத்து இந்திய மத்திய தொல்பொருள் நிபுணர்கள் அகழ்வாராட்சியில் ஈடுபட்டதில் 1300 ஆண்டுகள் பழமைவாய்ந்த கோவிலின் சிதைவுகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. அத்தோடு இரு கல்வெட்டுகளும் அங்கே கிடைக்கப் பெற்றன. இக்கோவிலின் 25 வீத சிதைவுகள் கண்டறியப்பட்ட நிலையில் இக்கோவில் பல்லவர் காலத்தது எனத் தெரியவந்துள்ளது.

அண்மையில் வீசிய டெனிஸ் எனும் சூறா வளியால் கியுபாவில் பெருஞ்சேதம் ஏற்பட்டு ள்ளது. நூற்றுக் கணக்கான வீடுகள் அழிந்தன பல்லாயிம் ஏக்கர் பயிற்ச்செய்கை நிலங்கள் நாசமாகின. பத்துப் பேர் உயிரிழந்தனர். இந்த அழிவுகளை கருத்திற்கொண்டு அயல் நாடான அமெரிக்கா மனிதாபிமான ரீதியில் நிதியுதவி செய்ய முன்வந்தபோது கியுபா அதனை நிராகரித்துவிட்டது. இது முதற் தடவையல்ல இப்படி அமெரிக்கா நிதியளிக்க முன்வரும்போதெல்லாம் கியுபா அதனை ஏற்க முன்வருவதில்லை. இது 45 ஆண்டுகால பகைமையை கியுபா இன்னும் மறக்காமலுள்ளதையே காட்டுகின்றது.



பூமி முழுவதிலுமே நன்னீர் வளம் அருகிக்கொண்டே வருகின்றது. மழை நீரைச் சேமிக்கும்படி பலநாடுகளும் மக்களை வலி யுறுத்தி வருகின்றனர். ஆனால் எந்நாட்டு மக்களும் அதீத சிரத்தையெடுப் பதாக தெரியவில்லையென்று ஐ.நா.சபையின் சர்வதேச சுற்றுச் சூழல் கண்காணிப்பு அமைப்பு கவலை தெரிவிக் கின்றது. அதே சமயம் இந்திய இமயமலைச் சாரலில் உள்ள மந்தாரா எனும் கிராம மக்கள் ஒன்றுபட்டு தம் உடலுழைப்பையும் ஒவ்வொரு வரும் கொடுக்கும் பணத்தையும் மூலதனமாகத் திரட்டி கிராமம் முழுதும் நீரைச் சேகரிக்க சிறுசிறு தொட்டிகளும் சிறு ஓடைநீர் வீணே சிந்திப்போகாமல் பல தடுப்பணைகள் கட்டியிருக் கிறார்கள். மழை நீர் வேகமாக ஓடிவிடா திருக்கவும் மண்ணரிப்பைத் தடுக்கவும் பல்லாயிரம் மூங்கில் கன்றுகள் நட்டிருக்கிறார்கள். தூர்ந்துபோன குளத்தை தூர்வாரி ஆழப்படுத்தி யிருக்கிறார்கள். பிற இடங்களில் வழியும் தண்ணீரை ஆழப்புதைத்த குழாய்கள் மூலம் குளத்துக்கு அனுப்புகிறார்கள்.

இப்போது 151 குடும்பங்கள் கொண்ட இக்கிராமத்தில் மூன்று போகமும் மிகச் சிறப்பாயுள்ளது. மூங்கில் சாகுபடியாலும் பால்வளம் பெருகியதால் கால்நடை களிலிருந்தும் வருவாய் கிடைப்பதால் இக்கிராம மக்கள் பிற கிராமங்களுக்கு கூலிவேலைக்குச் செல்வதை நிறுத்திவிட்டனர். மக்கள் வருமானம் 10 மடங்காய் உயர்ந்துள்ளது. இப்போதெல்லாம் மந்தாரா கிராம-வாசிகள் வயல்களில் தோட்டங்களில் வேலை செய்து அறுவடைசெய்து பிற கிராமங்களுக்கு கொண்டுசென்று வியாபாரம் செய்வதென்று எப்போதும் பரபரப்பாகவும் மகிழ்ச்சியாகவும் இருக்கிறார்கள்.


# கனடாவின் தலைநகர் ஒட்டாவாவில்

- வீடு வாங்க விற்க மற்றும் இலவச ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ள
- முதல் முறையாக வீடு வாங்குபவர்களிற்கான சலுகைகளை அறிய
- குறைந்த வட்டி வீதத்தில் Mortgage செய்து கொள்ள

அழையுங்கள் **நந்தா**





**Nantha Aiyadurai**, B.Eng.

Sales Rep.

**Office :** 613.823.7555
**Cell :** 613.866.9931
**Toll Free :** 1 800 472.6512

COLDWELL BANKER

Coldwell Banker Coburn Realty

# SAFETY TRUCKS

## Training School Ltd.

Training & Trucking Classes A, D & Z




In Classes

- 365 (Learning Permit)
- Log Books
- Air Brake (Z)
- Dangerous Goods
- Border Crossing
- Defensive Driving Course

- தமிழ் மொழி மூலம் அனைத்துப் பயிற்சிகளும் தனித்தனியாகக் கொடுக்கப்படும்.
- One On One Training
- அனுமதிப்பத்திரத்திற்கு (License) உத்தரவாதம் அளிக்கப்படும். வேலை எடுப்பதற்கும் உதவிகளும் ஆலோசனைகளும் வழங்கப்படும்.
- கனடாவில் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது தமிழ் TRUCK DRIVING பயிற்சி இடம். (11 ஆம் ஆண்டு)
- We Accept Welfare & Unemployment Insurance
- வாரத்தில் ஏழு நாட்களும் பயிற்சிகள் வழங்கப்படும்.

18 Years Canadian Experience with Trucks

சிறந்த பயிற்சி பெற அழையுங்கள்:

YOGAN SOCKALINGAM

Truck Driving போதனாசிரியர்

905-793-9546 / 416-616-5979

250 Summerlea Road, Brampton, ON



# MALVERN MONTESSORI SCHOOL

**10 Sewells Road, Scarborough**
**(Sewells / Neilson)**

***SPECIAL SUMMER DISCOVERIES FOR KIDS!***

***"The challenge in planning a program for young children is in finding a new way to motivate children's thinking by concrete experience"***

**APPLY NOW FOR OUR NEW SUMMER SCHOOL 2005!**


- AGES 2 1/2 TO 6 YEARS
- MORNING AND EVENING CLASSES
- LOW STUDENT ˆTEACHER RATIO
- MATH AND LANGUAGE (READING AND WRITING)
- HISTORY, GEOGRAPHY AND SCIENCE
- OUTDOOR PLAY ACTIVITIES
- ART AND CRAFT
- BRIGHT SPACIOUS CLASSROOMS
- EXTENDED CARE HOURS ( 7.30am - 6.15pm)

FOR ENROLLMENT PLEASE CALL (416) 724-8900

*"HELP THE CHILD HELP HIMSELF."*



# DEBT & MORTGAGE SOLUTIONS !!



- கடன் தொல்லையா?
- கடன்காரர்களின் தொந்தரவா?
- Credit பிரச்சனையால் Mortgage கிடைக்கவில்லையா?

**கவலைப்படாதீர்கள்!**

அனைத்து வித பொருளாதார பிரச்சனைகளுக்கும் தீர்வு காண

முதல், இரண்டாவது, மூன்றாவது Mortgage பெற அழையுங்கள்

**ராஜ்**

416-835-6695

Call : 'RAJ'

for all kinds of Debt & Mortgage Solution

Lendingtree.ca



# NTE AUTO

**New Trade Engineering Inc.**




ஸ்காபரோவில் 14வது வருட தன்னிகரற்ற சேவை

உங்கள் சகலவிதமான ஐரோப்பிய, ஜப்பானிய, அமெரிக்க வாகனத் திருத்த வேலைகளுக்கு நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்.

Also Air Condition Service & Repair

SIVABALAN

416.750.1573

**என். ரி. இ. ஓட்டோ இங்க்**

151 NATUCKET BLVD., UNIT #12, SCARBO., ON

IN NEW MILLENNIUM WE ARE ENTERING 11TH YEAR SERVICE IN SCARBOROUGH.

# எம் ஒவ்வொருவருக்குள்ளும் மறைந்திருக்கும் தீய சக்தி

என் கண்களால் காண்பவை யாவற்றையும் சிற்சில சமயங்களில் நான் சரிவர விளங்கிக் கொள்வதில்லை எனும் உண்மையை, இன்றுமுதல் நான் மனப்பூர்வமாக உணர்ந்து கொண்டு இனி விழிப்புணர்வுடன் செயற்பட ஆரம்பிக்கின்றேன். எமக்குள் ஒளிந்து கொண்டு, எம்மையே ஏமாற்றத் தருணம் பார்த்துக் காத்துக் கொண்டிருக்கும் அந்த ஏமாற்றும் அறிவைப் பற்றி இன்றும் கொஞ்சம் அலசுவோமா? எப்படி வாழப் போகிறாய் என்பதைப் பற்றி நீ ஏற்கனவே தீர்மானித்திருப்பாய். ஆனால் உன் செயலில் குற்றங்குறை பிடித்து, "நீ இப்படிச் செய்திருக் கலாமே! இல்லை, இல்லை! அப்படியல்லவா செயற்பட்டிருக்க வேண்டும். ஆம்! இனிமேல் கட்டாயம் இப்படித்தான் நடக்க வேண்டும்", எனக் குரல் எழுப்பி உன்னை உலுக்கி, நீயே உன்னைச் சந்தேகிக்க வழி வகுத்து விடும். உனக்குள்ளிருக்கும் அத்தீய சக்தி. இத்தகைய கெட்ட சிந்தனைகள் உன் மனதில் எழுந்தவுடன், அவற்றை அடையாளங் கண்டு நசுக்கி அழித்துவிடுவது உனது பொறுப்பு. வாழ்வின் நீரோட்ட நியதியின்படி, இந்த நிமிஷம் நீ எங்கிருக்கிறாய், என்ன செய்கிறாய் எனும் ஆசீர்வாதங்களினால், நீ கற்றுக் கொள்ளும் பாடங்களினால் ஒரு பிரயோசனமும் இல்லை எனக் கூறி, அந்த ஏமாற்றிடும் அறிவு உன்னைக் குழப்பியடிக்க இடங்கொடதே. செய்ய வேண்டியதைக் செய்து முடி.

ஒரு சிக்கலிருந்து விடுபட உன்னால் முடியாவிட்டால் அல்லது நீ விரும்பியவற்றிற்குள் பிரவேசிக்க முடியாவிட்டால், உனக் குள்ளிருக்கும் அந்தக் கிறுக்குப் புத்தி உடனடியாக உனக்குக் கிசுகசுக்கத் தொடங்கி விடும். "இப்படி நடந்திருந்தால் என்னால் அதைச் செய்திருக்க முடியும்" அல்லது "இப்படித் தான் நடக்கும் என்பதை நான் முன்கூட்டியே உணர்ந்திருக்க வேண்டும். அவன், அவள், அவர்கள், நான், இப்படிச் செய்திருந்தால்.... என அதன் குரல் ஒலிக்க ஆரம்பித்ததும், உனது குரலை நீ அதற்கு மேலாக உயர்ந்து." இப்படி என்னைக் குழப்பி கலங்கப்பண்ண ஒருவருக்கும் இடங் கொடுக்கமாட்டேன்" அல்லது, "ஒருவராலும் என்னைத் தடுத்து நிறுத்த முடியாது". அல்லது "என் இதயத்துள் ஒளிரும் இறைவனின் பொறி நிச்சயம் என்னை வழிநடத்தும்! இவ்வாறான உன்னை ஊக்குவிக்கும் ஏதாவது வரிகளை நீ மனதுள் பாட ஆரம்பி. நீ சொல்ல விரும்பும் அந்த இடத்திற்கு உன்னால் போக முடியாது என


## ஆளுமை (55) வளர்ச்சிக்குப் பிரார்த்தனைகள்

உன்னை அச்சுறுத்தும் அந்த இரகசியக் குரலை மழுங்கடித்து ஒழித்துவிட இன்று கங்கணங் கட்டிக்கொள்.

பிரியமான நண்பா! கவனமாக இரு! அத்தீயசக்தி மிகவும் சாமர்த்தியமானது. நீ நம்பக்கூடிய உத்தரவாதங்கள் சாட்சிகளை அது நிச்சயம் உன் முன் வைக்கும். உன் சந்தேகத்தால் நீ நேசிப்பவர்களையே உனக்கெதிராகத் திருப்பும். அதை நம்பி ஏமாந்து போகாதே! உன்னால் இதை வெல்ல முடியும். நீயே வெற்றியாக மாறு! இதற்கு எதிராகச் செயற்பட ஆரம்பி! நேற்று நீ என்ன செய்தாய், என்ன செய்யவில்லை, எனும் கவலையில் உனது குறிக்கோளை அடையும் முயற்சியைக் கைவிட்டு விடாதே! அத்தீய அறிவு உன்னைச் சுற்றிப் பின்னும் மாயவலையில் அகப்படாமல் புத்தியுடன் தப்பித்துக்கொள்.

இன்றுவரை உனக்குள் ஒளிந்திருக்கும் இத் தீயசக்தியின் குரலை, விளையாட்டை, கருமங்களை நீ அடையாளங் காணாது இருந்திருக்கலாம். உனது குறிக் கோளையடைந்திட இன்று உன்னையே நீ தட்டிக்கொடுத்து, அதைச் சீக்கிரம் எட்ட வீறு நடை போட ஆரம்பி. எனது குறிக்கோள்களை அடையும் முயற்சிக்கு எனது முழுசக்தியையும் ஒன்று திரட்டிச் செயற்பட இன்று தீர்மானித்துக் கொள்கிறேன்.


மேலதிக தகவல்களிற்கு அழையுங்கள் 905-624-9617



**லலிதா புரூடி**



**தமிழர் நிர்வாகத்தில் ஒரு**

# EMBASSY

விசா கிடையாது, பாஸ்போட் வழங்கப்படமாட்டாது

**ஆனால்**



- வீட்டிற்குத் தேவையான தரமான உணவுப் பொருட்கள், (Groceries)
- இலங்கை / இந்திய இனிப்புப் படையல் (Sweets)
- இலங்கை / இந்திய உணவகம் (Restaurant)

சமோசாவிற்கு அழையுங்கள்
416-332-0944

416-332-8451
Finch / Middlefield
5200 Finch Ave., Scarborough



**visit us online at www.divinehome.com**



**25%-45% OFF**

கைகளால் செதுக்கப்பட்ட பூஜைமேடைகள்
அன்பளிப்புப் பொருட்கள்,
சுவாமிப்படத்தட்டுகள், படங்கள்
சுவாமி சிலைகள்,
பூஜையறை அலங்காரப் பொருட்கள்

ஒவ்வோரு வீட்டிற்கும் ஏற்ற சுவாமிப்படத்தட்டுகள்

Scarboroughவில் Eglinton & Bellamy சந்திப்பில்

# DIVINE HOMES

## Peace & Prosperity

தெய்வ இல்லம் அமைதிக்கும், சேழுமைக்கும்

100ற்றும் அதிகமான தெரிவுகள்

**2-2956 Eglinton Avenue East, Scarborough**
**Call: 416-289-1043, 416-999-3997**

**புதிய கிளை Brampton மாநகரில்**

**HWY 10/Sandalwood**
**114 Masters Cr., Brampton**
**Tel: 905-495-4208**

**Special Design & Custom Orders Available... Call for more info...**








**Buy Direct From Manufacturer: Prices Slashed**



# ஆரோக்கிய வாழ்வு

**N. செல்வசோதி**

## மத்ஸ்யாசனம் (மீன் ஆசனம்)



மீன் எப்படி குளத்திலுள்ள அழுக்குகளைத் தின்று நீரைச் சுத்தப்படுத்துகிறதோ, அது போன்று இவ்வாசனம் இரத்தத்தைச் சுத்தப்படுத்தி உடல் ஆரோக்கியத்தைக் காப்பதால் இந்தப் பெயர் வந்தது.

### மத்ஸ்யாசனமும் தைமஸ் சுரப்பியும்

நெஞ்சில் தைராய்டு சுரப்பிக்கு அருகே சிவப்பும், மண் நிறமும் கலந்த வண்ணத்தில் இருக்கும் சுரப்பியே தைமஸ் சுரப்பியாகும். இது சிறு நெருப்புப் பெட்டி அளவில் இரண்டு சுவாச பைகளுக்கும் நடுவில் அமைந்திருக்கிறது. நமது உடல் வளர்ச்சியைப் பற்றி இது மிகுந்த அக்கறை கொண்டுள்ளது. இது 'தைமோஸின்' என்ற ஹோர்மோனை உற்பத்தி செய்கிறது.

நமது உடலில் புகுந்து உபாதை கொடுக்கக்கூடிய விஷம் மற்றும் நோய்களை உண்டாக்கும் கிருமிகள் நுண்ணுயிர்கள், மாற்று இரத்தங்கள் முதலியவற்றை அடையாளம் கண்டுபிடித்து வெளியேற்ற அல்லது எதிர்த்து சண்டை போட்டு அழிக்க ஒரு பெரும் படையே நம் உடலில் தயாராகக் கண்விழித்துக் கொண்டு காத்திருக்கிறது. இந்தப் படையின் தலைவன் தான் இந்த தைமஸ் சுரப்பியாகும். வயதாக ஆக தைமஸ் நாளங்களில் சுறுசுறுப்பு மங்க ஆரம்பிக்கிறது. அதனால்தான் வயதான வர்களை நோய்கள் சீக்கிரம் பிடித்துக் கொள்கிறது. சில சமயம் 'லிம்போசைட்ஸ்' அணுக்கள் தவறுதலாக செயல்படவும் கூடும். அப்போது இந்த எதிர்ப்புத் திறன் மூட்டுக்களில் உள்ள சதைப்பற்றைப் பாதிக்கிறது. ஆர்தரிட்டில் என்ற முடக்கு வியாதி ஏற்படுகிறது.

தொடர்ந்து மனதை பாதிக்கக்கூடிய பதட்டம் (Tension), தைமஸின் செயல் திறனையும் பாதிக்கிறது. பயம், சோர்வு, களைப்பு, நோயின் அதிர்ச்சி ஆகியவை இதைப் பாதிக்கக் கூடும். தொடர்ந்து இவை ஏற்பட்டால் தைமஸின் அளவு சில நாட்களில் மூன்றில் ஒரு பங்காகச் சுருங்கி விடக்கூடும்.

'தைமோஸின் ஹோர்மோன் இரத்த ஓட்டத்தில் கலந்து விட்டால் உடல் முழுவதுமே சுறுசுறுப்பாக இயங்க ஆரம்பித்து விடுகிறது. ஐம்பது வயதுக்குப் பிறகு தைமோஸின் உற்பத்தி பொதுவாக நின்று போகிறது. இந்த நிலையில் உடம்பில் தைமோஸின் ஹோர்மோன் செலுத்தப்பட்டால் உடலுக்கு புதுப்பலமும், புதுப் பொலிவும் கிடைத்து விடுமா? முதுமையை வெல்லவும் இயலுமா? என்று மருத்துவ ஆராய்ச்சியாளர்கள் இது பற்றி ஆராய்ச்சி நடத்தி வருகிறார்கள்.

ஆனால் நம் யோகிகள் பல ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பே மத்ஸ்யாசனத்தை கண்டுபிடித்து பலனும் கூறியுள்ளனர்.

### பயன்கள்

இது சர்வாங்காசனத்திற்கு மாற்று ஆசனம் ஆகும். சர்வாங்காசனம், ஹலாசனம் செய்வதால் சில சமயம் ஏற்படும் கழுத்து வலியை போக்கி விடும்.

தொண்டையிலுள்ள காற்றுக் குழாய், ஒலி பெட்டி ஆகியவை நன்கு திறக்கப்படுவதால் நன்கு ஓய்வு பெறுகிறது.

ஆழ்ந்த மூச்சு ஏற்படுவதால் நுரையீரல் பலம் பெறுகிறது.
முகத்தில் பொலிவு ஏற்படும்.
இரத்த மூல வியாதியை குணப்படுத்துகிறது.
ஆண்மையில்லாமையை போக்குகிறது.
முதுகுத்தண்டு முதுகுபுற தசைகள் புத்துணர்ச்சி பெறுகிறது.
கால் கை வலிப்பு, தொழுநோய், அதிக உடல் எடை, தோல் வியாதிகள் ஆகியவற்றைப் போக்க உதவுகிறது.
தூக்கமின்மை நோய் நீங்கி இரவில் ஆழ்ந்த நித்திரை ஏற்படும்.
ஆஸ்த்துமா, மூச்சுக் கோளாறு ஆகிய நோய்களைக் கட்டுப் படுத்துகிறது.



# COMMUNITY FINANCIAL SERVICE GROUP



றோயல் இன்சூரன்ஸ் நிறுவன பிராந்திய துணைத் தலைவர் திரு. ஜோன். மக்மீன்ஸ் சமூக நிதி நிறுவனத் தலைவர் V.S. துரைராஜாவுடன் M.G.A நியமன கடிதத்தை கையளிக்கும் காட்சி

கம்யூனிட்டி பைனான்ஸியல் சர்வீஸ் குரூப் என்று ஒரு புதிய நிதி நிறுவனம் ரொறொன்ரோ மாநகரில் திரு. V. S. துரைராசா தலைமையில் ஆரம்பமா கியுள்ளது. திரு. துரைராசா அவர்கள் தமிழ் மக்களுக்கு இலங்கையில் மட்டுமன்றி கனடாவிலும் மிகச் சிறந்த சேவை ஆற்றிவருவது தெரிந்ததே. இவரின் சமுதாயப் பணி பலருக்கும் அறிமுகமானதே!. தமிழ் மக்களுக்கு நிதித்துறையில் சிறப்பாகச் சேவையாற்றும் நோக்கத்துடன் துரைராசா அவர்கள் கம்யூனிட்டி பைனான்ஸியல் சர்வீஸ் குருப்பைத் தொடங்கியுள்ளார். மேலும் கம்யூனிட்டி பைனான்ஸியல், பணி புரிபவர்களுக்கு கூட்டுறவு முறையில் சிறந்த ஊதியத்தைத் தரவும். இலாபத்தின் கணிசமான பகுதியை தர்மகாரியங்க ளுக்குச் செலவிடவும் தீர்மானித்துள்ளது.

இதன் தொடக்கமாக கனடாவில் புகழ் பெற்ற வங்கியான றோயல் வங்கியுடன், இன்ஸ்ரன்ஸ் பொருட்களைத் தமிழ் மக்களுக்கு நல்ல முறையில் பெற்றுத்தர ஒப்பந்தம் இன்று கைச்சாத்தானது. எளிமையாக நடைபெற்ற இந்த வைப வத்தில் றோயல் வங்கியின் பிரதிநிதியாக, ஜான் மெக்மீன்ஸ், பிராந்திய உதவித் தலைவர் கலந்து கொண்டார். வாழ்க்கை க்கு ஆதாரமான நிதித்துறையில், கனடாவில் தமிழருக்கு என தனி இடம் தேவை. அதன் முதற்படியே கம்யூனிட்டி பைனான்ஸியல் சர்வீஸ் குரூப் றோயல் வங்கியுடன் செய்து கொண்டமாஸ்டர் கொன்ராக் எனப்படும் இன்ஸ்ரன்ஸ் முதன்மை ஒப்பந்தம். தமிழர்களுக்குக் கிடைத்த முதல் ஒப்பந்தம் இதுவே என்பதும் குறிப்பிடத்தக்கது. மற்றைய கனடிய நிதி நிறுவனங்களுடனும் இத்தகைய முதன்மை ஒப்பந்தத்தைக் கைச்சாத்திட கம்யூனிட்டி பைனான்ஸியல் சர்வீஸ் குரூப் பேச்சுவார்த்தைகளை நிகழ்த்தி வருகின்றது.

இன்ஸ்ரன்ஸ் மட்டுமன்றி, வீடுவாங்குதல், கடன்கள், முதலீடுகள், வரிகள் போன்ற வற்றிலும் தமிழ் மக்களுக்குக் கனடாவில் சிறந்த சலுகைகளையும், சேவைகளையும் கம்யூனிட்டி பைனான்ஸியல் சர்வீஸ் குரூப் பெற்றுத் தரஉள்ளது. மேலும் தமிழ் விற்பனை முகவர்களுக்கு அவர்கள் உழைப்புக்கு ஏற்ற சிறந்த ஊதியத்தைப் பெற்றுத் தரவும், புதிய விற்பனைப் பிரதிநிதிகளை உருவாக்கவும், வேலை வாய்ப்பை அதிகரிக்கவும் கம்யூனிட்ட பைனான்ஸியல் சர்வீஸ் குரூப் நடவடிக்கை எடுத்து வருகின்றது.

இச் சேவையினைப் பற்றி மேலும் அறிந்து கொள்ளவும், பயன் பெறவும் அலுவலகத துடன் தொடர்பு கொள்ளலாம்.


தொலைபேசி இல:
416.907.2883 / 416.907.2884


## வீட்டில் பூச்சி, எலித் தொல்லையா?

வீடுகள், தொடர்மாடி வீடுகள், தொழிற்சாலைகள், வியாபார நிலையங்கள் போன்றவற்றில் பூச்சி, எலித் தொல்லையா? கவலையை விடுங்கள். முற்றாக ஒழிக்க அழையுங்கள்

Kanthan: 416.291.3997





- No Spraying
- No Smelling
- No Moving




ராசம்மாக்கா, ராசம்மாக்கா ரூபன் எங்கை எண்டபடி வந்தா. ஆட்டிலறி அன்னம்மா.
ஆடிப்பிறப்பு கொழுக்கட்டை அவிக்கவேணும். சக்கரை கிடக்கே என்றபடி வந்தார் உலகர் மனதுள் சிரித்தார். அயல் வீட்டில்,
மிளகாய் கடன்வாங்கி தேங்காய் கடன்வாங்கி சம்பல் அரைத்து இடியப்பம் புட்டு அவர்களுக்கு கொடுத்து சாப்பிட்ட காலங்கள் துன்பத்திலும் ஒரு இன்பம் தான் இன்று தேவையானளவு, பொருட்கள் மிளகாய், மல்லி, தேங்காய், செத்தல்மிளகாய் கடன் இல்லை.
ஆனால்




ஆயிரம் இருந்தும் ஆயிரம் இருந்தும் அமைதி, சந்தோஷம் குறைவுதான்.
ஆடிப்பிறப்பு ஆடிமாதம் தமிழுக்கு ஓராம் திகதி. ஆடிப்பிறப்பு நாளை விடுதலை ஆனந்தம், ஆனந்தம் தோழர்களே. கூடிப்பனங்கட்டி, கூழும் குடிக்கலாம், கொழுக்கட்டை தின்னலாம் தோழர்களே
தங்கத்தாத்தா நவாலியூர் சோமசுந்தரப்புலவர் எப்படி கற்பனை வளத்தில், கும்மியாகவோ, கூத்தாகவோ சிறுவர்கள் சேர்ந்தும் பாடக்கூடிய இந்தப் பாடலை இயற்றினார்.
ஆடிமாதம் அவரது நினைவுதினம் யூலை 27ஆம்திகதி.
ஆடிப்பிறப்பு அவரை நினைத்து ஆடிமாதம் 27ஆம் திகதியிலும் அவரை நினைக்கின்றோம்.






நன்மை தீமைகள் பல நடந்து நடப்பதும் யூலை மாதம் தான் யூலை 83 கலவரம்.

எத்தனைகோயில்கள் கொடியேற்றம் தீர்த்தம் வல்மொறின், வரசித்தி றிச்மண்ட்ஹில் முருகன் கொடியேற்றம், தேர் தீர்த்தம்.



வெள்ளையிரை காறி உமிழ்ந்து வெளியேறு என கோடிட்ட வீரபாண்டிய கட்டபொம்மனை எம் கண்முன் இன்னும் நினைக்க வைத்த நடிகர் திலகம் சிவாஜி கணேசன் நினைவுதினம் யூலை இரண்டு.




சுவாமி விபிலானந்தர், அன்னை சாராததேவி, நாதஸ்வர வித்துவான் கலாசூரி N.K. பத்மநாதன் நாம் வாழவழி காட்டியவர்கள்
இயல், இசை, நாடக மூலம் தமிழை வளர்த்தவர்கள் பலரை நாம் நினைத்தே பார்ப்பதில்லை. உயிரோடிருக்கும்போதே பல கலைஞர்களை பாராட்டவோ நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ள முடியாதவர்கள் இறந்தபிறகு நினைக்க போகிறார்கள்.

கையில் ஏழு,எட்டு போன்காட்டுடன் வந்தா ஆட்டிலறி அன்னம்மா



லண்டனில் அன்னம்மாவின் அக்கா அன்னலட்சுமி லண்டன் லவுட்ஸ்பீக்கர் என எல்லோராலும் அழைக்கப்படும் அன்னலட்சுமியின் இதுவரை 10, 15 தரம் ரெலிபோன் செய்தும் பதில்இல்லை.



லண்டன் ரயிலிலும், பஸ்ஸிலும் குண்டு வெடித்தது.
உலகம் முழுவதும் அல்லோல கல்லோலப் படுகிறது.



வெள்ளைக்கார ஆட்சியில் சூரியன் அஸ்தமித்ததில்லை என வசனம் கேட்டிருந்தோம்.
குண்டு வெடிப்பால் லண்டனிலேயே இருள்சூழ்ந்தது.
எய்தவர்கள் யார் அம்புகள் என்ன செய்யும்.

ஹலோ, ஹலோ லண்டன் லண்டன் ரெலிபோன் பதில் இல்லை.
லைன் பிழையா ஆட்டிலறி அன்னம்மா வாங்கிய போன் காட்.
வேலை செய்யவில்லையா அமளிதுமளி ஓய்வதற்குள் பிராங்பேட் பேரம்பலம் மனைவி கையில் பார்சலுடன் வந்தாள் ஏலக்காய் போட்டு பதமாக அவித்து, பொரித்த கொழுக்கட்டை, மோதகம் மூக்கைத்துளைத்தது.
வாங்கோ, வாங்கோ என ராசம்மா வரவேற்க ரூபி,
ரூபி மோதகம் வந்திருக்கு இல்லை,
இல்லை உங்கடை அப்பா, அம்மா வந்திருக்கினம் என்று சொல்ல உலகர் எடுத்து வா பேரம்பலம் வாறகிழமை உங்கட ஊர்ஒன்றுகூடலாக்கம் என்று சொல்ல ஓம் என்றபடி பேரம்பலம் கதைக்க

டடி, மம்மி என்றபடி ரூபி வர ராசம்மாக்க உலகண்ணைக்கு பயறு, சர்க்கரை கூடாது என்று சொல்ல உள்ளுடனை எடுத்துப் போட்டு சாப்பிடுங்கோ என்று சிரித்தபடி சொன்னா செக்கண்புளோர் செல்லம்மா. ஹலோ, ஹலோ லண்டன், லண்டன் என்றபடி போனில் பிஸியாக இருந்தா ஆட்டிலறி அன்னம்மா






இளவரசர்கள் மீண்டும் திருமணம்

சாள்ஸ் திருமணத்தை எதிர்த்திட 25,000க்கு மேற்பட்ட கடிதங்கள் (வானொலி செய்தி)

அன்புள்ள மன்னவனே ஆசையில் ஒரு கடிதம்





டயானா - இறப்பதற்கு முதலே சாள்சை திருமணம் செய்யும்படி
மறைந்த இளவரசி டயான சொன்னாராம்.
(வானொலிச்செய்தி)

*மன்னவனே அழலாமா, கண்ணீரை விடலாமா*

என்னொருத்தர் உருவத்துக்கு இருப்பவரும் நானல்லோ

## நகைச்சுவைத் தொடர் 130

# ராசம்மா ராச்சியம்

கலகலப்பு தீசன்


17 வருடங்களாக தமிழர் மத்தியில் நன்மதிப்பைப் பெற்ற

# யோகாஸ்

